# DFCC வங்கி கடன் அட்டைகளின் பாவனைக்கான நிபந்தனைகள்

## 1. வரைவிலக்கணங்கள்

சந்தர்ப்பம் தேவைப்படுத்துவதை அல்லது அனுமதிப்பதைப் பொறுத்து, இந்த நிபந்தனைகளில்:

1.1 ''இந்த ஒப்பந்தம்'' என்பது DFCC வங்கி பி.எல்.சி.க்கும் அட்டை வைப்பாளருக்கும் இடையிலான ஒப்பந்தத்தைக் குறிக்கும். காலத்திற்குக் காலம் மாற்றப்படக்கூடிய இந்த விதிமுறைகளே இதன் விதிமுறைகளாகும்.

1.2 ''மேலதிக அட்டை வைப்பாளர்'' என்பது ஒப்பந்தத்தின் சரத்து 9இன் கீழ் நியமிக்கப்படும் ஒருவரைக் குறிக்கும்.

1.3 ''வங்கி'' என்பது DFCC வங்கி பி.எல்.சி.யை குறிக்கும்.

1.4 ''அட்டை'' என்பது அட்டை வைப்பாளருக்கு வங்கியினால வழங்கப்பட்ட அட்டையைக் குறிக்கும்.

1.5 ''அட்டைக் கணக்கு'' என்பது அட்டைக் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் வங்கியில் பேணப்படும் ஒரு கணக்கைக் குறிக்கும்.

1.6 ''அட்டை வைப்பாளர்'' என்பது இந்த ஒப்பந்தத்தின் கீழ் வங்கியினால் வழங்கப்பட்ட அட்டையை வைத்திருக்கும் ஒருவரைக் குறிக்கும். மேலதிக அட்டை வைப்பாளரும் இதில் உள்ளடங்குவார்.

1.7 ''அட்டைக் கொடுக்கல் வாங்கல்'' என்பது அட்டை, அட்டைக் கணக்கு இலக்கம் மற்றும்/அல்லது PIN இலக்கத்தைப் பயன்படுத்தி அல்லது இணையத்தளம், டெலிபாங்கிங், கோல் பாங்கிங், ஈ-வொலட் உள்ளிட்ட அட்டைக் கொடுக்கல் வாங்கல்களுக்கு வசதியளிக்கும் வேறு கொடுப்பனவு ஊடகங்களின் அல்லது வேறேதும் இணையத்தளக் கொடுப்பனவு நுழைவாயிலின் ஊடாக, சேவைகள்/பண்டங்கள் தொடர்பில் அல்லது வேறு விதத்தில், இந்த நிபந்தனைகளில் விபரிக்கப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளவாறு, உங்கள் அறிவுடன் அல்லது அவ்வாறில்லாமல், மேற்கொள்ளப்படும் ஒரு கொடுக்கல் வாங்கலை (ஏதேனும் பண்டங்கள், சேவைகள் மற்றும்/அல்லது அனுகூலங்களுக்கான கொடுப்பனவு, ஏதேனும் தரும நோக்கங்களுக்கான கொடுப்பனவு, ஏதேனும் ரொக்க முற்பணம் என்பவையும் இதில் உட்படும்) குறிக்கும்.

1.8 ''ரொக்க முற்பணம்'' என்பது ATM வலையமைப்பின் ஊடாக அல்லது வங்கிக் கிளையின் ஊடாகக் கடன் அட்டைக் கணக்கிலிருந்து பணம் மீளப் பெறப்படுவதைக் குறிக்கும்.

1.9 ''உடனடிக் குடும்ப உறுப்பினர்'' என்பது அட்டை வைப்பாளரின் வாழ்க்கைத் துணைவர், அட்டை வைப்பாளரில் தங்கியிருக்கும் 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகள், அட்டை வைப்பாளரின் பெற்றோர் ஆகியோரைக் குறிக்கும்.

1.10 ''வணிகர்'' என்பது கடன் அட்டையை ஏற்றுக்கொண்டு பண்டங்கள் அல்லது சேவைகளை விற்பதற்கு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு நபரை அல்லது நிறுவனத்தைக் குறிக்கும்.

1.11 ''கடன் உச்சவரம்பு'' என்பது வங்கியினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்பட்டு, பிரதான அட்டை வைப்பாளருக்கு அறிவிக்கப்படும் பிரகாரம், ஒன்றிற்கு மேற்பட்ட அட்டைக் கணக்குகளுக்கென ஒருங்கிணைக்கப்பட்ட கடன் தொகையொன்று ஒதுக்கப்படும். அட்டைக் கணக்கின் அல்லது கணக்குகளின் பேரில் அனுமதிக்கப்படும் ஆகக்கூடிய பற்று மீதியைக் குறிக்கும்.

1.12 "PIN" என்பது அட்டை வைப்பாளருக்கு வழங்கப்பட்ட தனிப்பட்ட அடையாள இலக்கத்தைக் குறிக்கும்.

1.13 ''பிரதான அட்டை வைப்பாளர்'' என்பது எவரின் பெயரில் ஓர் அட்டைக் கணக்கு பேணப்படுகின்றதோ மற்றும்/அல்லது எவரின் வேண்டுகோளுக்கிணங்க ஒரு அல்லது பல மேலதிக அட்டைகள் வங்கியினால் மேலதிக அட்டை வைப்பாளர்களுக்கு வழங்கப்பட்டதோ, அந்த நபரைக் குறிக்கும்.

1.14 "ATM" என்பது தன்னியக்க டெலர் இயந்திரமொன்றை அல்லது அட்டையைப் பயன்படுத்தி இயக்கப்படும் இயந்திரமொன்றைக் குறிக்கும். அது எமக்குச் சொந்தமானதாக அல்லது அட்டையை ஏற்றுக்கொள்ளும்

வேறொரு பங்குபற்றும் வங்கிகளுக்கு அல்லது நிதி நிறுவனங்களுக்கு அல்லது வீசா உலகளாவிய வலையமைப்பிற்கு அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட வலையமைப்புகளுக்குச் சொந்தமானதாக இருக்கலாம்.

1.15 ''நாம், எமது, எமக்கு'' என்பன DFCC வங்கி பி.எல்.சி.யை குறிக்கும்.

1.16 ''நீங்கள், உங்கள், அட்டை வைப்பாளர்'' என்பன யாருக்கு அட்டை வழங்கப்பட்டுள்ளதோ அவரைக் குறிக்கும். இதில் பிரதான அட்டை வைப்பாளரும், சந்தர்ப்பம் தேவைப்படுத்துவதைப் பொறுத்து, ஒவ்வொரு மேலதிக அட்டை வைப்பாளரும் உட்படுவர்.

1.17 ''கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதி'' என்பது கடன் அட்டை விபரக்கூற்றில் காட்டப்படும் மொத்த நிலுவை அல்லது குறைந்தபட்ச கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய இறுதித் திகதியைக் குறிக்கும்.

1.18 ''மாதாந்த விபரக்கூற்றுக் காலம்'' என்பது கடைசி விபரக்கூற்றுப் பட்டியலிடும் திகதிக்கும் அடுத்த பட்டியலிடல் ஆரம்பிக்கும் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தைக் குறிக்கும்.

எளிதில் தொடர்புபடுத்துவதற்காகவே நாம் இந்த ஒப்பந்தத்தில் தலைப்புகளைப் பயன்படுத்தியுள்ளோம். இந்த ஒப்பந்தத்தின் உட்பொருளை விளக்குவதற்கு இத் தலைப்புக்களைப் பயன்படுத்த முடியாது.

**2. அட்டையின் பாவனை**

2.1 அட்டை கிடைத்தவுடன் அட்டை வைப்பாளர் அதில் கையொப்பமிட வேண்டும்.

2.1.1 அட்டையானது, குறிப்பிட்ட அட்டை வைப்பாளரினால் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

2.1.2 அட்டையானது, பாவனை நேரத்தில் நடைமுறையிலிருந்த ஒப்பந்த விதிமுறைகளுக்கேற்பப் பயன்படுத்தப்பட வேண்டும்.

2.1.3 அட்டையானது, கடன் உச்சவரம்பிற்குள் பயன்படுத்தப்பட வேண்டும் (உச்சவரம்பை மீறிய தொகை உடனடியாக வங்கிக்கு மீளளிக்கப்பட வேண்டும்). உச்சவரம்பு மீறப்பட்டுள்ளதா என்பதைக் கணிக்கும்போது, இன்னமும் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படாத ஏதேனும் அட்டைக் கொடுக்கல் வாங்கல் தொகை, உத்தேச கொடுக்கல் வாங்கல் ஒன்று தொடர்பில் ஒரு மூன்றாம் தரப்புக்கு வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட தொகை, அட்டை வைப்பாளரின் வேண்டுகோளுக்கு அமைவாக ஒரு எதிர்காலக் கொடுக்கல் வாங்கலுக்காக வங்கியினால் ஒதுக்கிவைக்கப்பட்ட தொகை என்பவற்றையும் வங்கி கருத்திற்கு எடுத்துக்கொள்ளும்.

2.1.4 அட்டையானது, அதில் பொறிக்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் காலத்திற்குள் பயன்படுத்தப்பட வேண்டும்.

**3. அட்டை**

3.1 அட்டை வங்கியின் சொத்தாகும். வங்கி கோரிக்கை விடுக்கும் பட்சத்தில், அட்டை வைப்பாளர் அதனை உடனடியாக வங்கிக்கு மீளளிக்க வேண்டும்.

3.2 இந்த ஒப்பந்தத்தின் கீழ் அட்டை வைப்பாளருக்குள்ள கடப்பாடுகளை எவ்விதத்திலும் பாதிக்காமலும் (இக் கடப்பாடுகள் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும்) முன்னறிவித்தல் கொடுக்காமலும் காரணம் காட்டாமலும் எந்த நேரத்திலும், அட்டையை மற்றும் அட்டையைப் பாவிக்க அட்டை வைப்பாளர் கொண்டுள்ள உரிமையை (முழுமையாக அல்லது குறிப்பிட்ட சில வசதிகள் தொடர்பில் மட்டும்) வாபஸ் பெறுவதற்கு அல்லது ஏதேனும் அட்டையை மீள வழங்க, புதுப்பிக்க அல்லது பதிலீடு செய்ய மறுப்பதற்கு வங்கி தனது பூரண தற்றுணிபிற்கேற்ப நடவடிக்கை எடுக்க முடியும். அட்டை வைப்பாளர் ஒருவர் தானாகவே அட்டையைத் திருப்பிக்கொடுத்தாலும், அட்டை வைப்பாளருக்கு இதன் கீழுள்ள சகல கடப்பாடுகளும் வங்கிக்குத் திருப்தியளிக்கும் முறையில் நிறைவேற்றப்படும் வரை தொடர்ந்து நடைமுறையிலிருக்கும்.

**4. அட்டையின் விநியோகம் மற்றும் பாவனையும் தனிப்பட்ட அடையாள இலக்கமும்**

4.1 அட்டை யாருக்கு வழங்கப்பட்டதோ அந்த நபர் (''அட்டை வைப்பாளர்'') அட்டை கிடைத்தவுடனேயே அதன் பின்புறத்தில் கையொப்பமிட வேண்டும். அத்துடன், இந்த அட்டையை வேறெவரும் பயன்படுத்த அனுமதிக்காமல் எல்லா வேளைகளிலும் மிகவும் பாதுகாப்பாகத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

4.2 அட்டைகள், அட்டை வைப்பாளருக்கும் மேலதிக அட்டை வைப்பாளர்களுக்கும் அனுப்பீட்டுச் சேவை (Courier) மூலம் அனுப்பப்படுமானால், அட்டையை (அட்டைகளை) பெறும் அட்டை வைப்பாளர்(கள்) தனது/தமது அடையாளச் சான்றைச் சமர்ப்பிப்பதுடன் அட்டை கிடைத்துவிட்டதை ஒப்புக்கொண்டு அறிவிக்கவும் வேண்டும். அட்டை வைப்பாளர் அவரது தற்றுணிபிற்கேற்ப அவரது சார்பில் அட்டையை ஏற்றுக்கொள்ள ஒரு மூன்றாம் தரப்பிற்கு அதிகாரமளிக்க முடியும். அட்டை(கள்) அட்டை வைப்பாளரினால்/மேலதிக அட்டை வைப்பாளரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நேரத்திலிருந்து அட்டையின்(அட்டைகளின்) பேரில் உறப்படும் சகல அறவீடுகளுக்கும் அட்டை வைப்பாளர் பொறுப்பாளியாவார். வங்கியானது தனது தற்றுணிபிற்கேற்ப வங்கியினால் தீர்மானிக்கப்படும் ஒரு மூன்றாம் தரப்பிடம் அல்லது அதன் பிரதிநிதியிடம் அட்டையைக் கையளிக்கக்கூடும். அட்டை(கள்) அவ்வாறு கையளிக்கப்பட்ட நேரத்திலிருந்து அட்டையின்(அட்டைகளின்) பேரில் உறப்படும் சகல அறவீடுகளுக்கும் அட்டை வைப்பாளர்/மேலதிக அட்டை வைப்பாளர்(கள்) பொறுப்பாளியாவார்கள்.

4.3 அட்டை வைப்பாளரின்/மேலதிக அட்டை வைப்பாளரின் தனிப்பட்ட அடையாள இலக்கம் (PIN) வங்கியில் வைத்து வழங்கப்படும் அல்லது நேரில் விநியோகிக்கப்படும் அல்லது அவர்களின் எழுத்துமூல வேண்டுகோளுக்கிணங்கத் தபாலில் அனுப்பப்படும் அல்லது வங்கியின் தற்றுணிபிற்கேற்ப அனுப்பீட்டுச் சேவை (Courier) மூலம் விநியோகிக்கப்படும். நியாயமான ஒரு காலப்பகுதிக்குள் தபால் திணைக்களத்திலிருந்து அல்லது அனுப்பீட்டுச் சேவையிலிருந்து மாறான அறிவித்தல் எதுவும் கிடைக்காவிட்டால், PIN இலக்கம் அட்டை வைப்பாளரினால் பெறப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும். PIN இலக்கம் பெறப்பட்டதும், அது அட்டை வைப்பாளரின்/மேலதிக அட்டை வைப்பாளரின் சொத்தாக இருக்கும். இந்த இலக்கம் முற்றிலும் பாதுகாப்பாக இருப்பதை உறுதிப்படுத்த அட்டை வைப்பாளர்/ மேலதிக அட்டை வைப்பாளர் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

4.4 அட்டை வைப்பாளர்/ மேலதிக அட்டை வைப்பாளர் ஏதேனும் சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கலை மேற்கொண்டுள்ளார் என்பதை நிரூபிப்பதற்கு வங்கியிடம் நியாயமான ஆதாரங்கள் இருக்குமாயின், அத்தகைய கொடுக்கல் வாங்கலின் பெறுமதியையும் அதனுடன் தொடர்புடைய ஏதேனும் அறவீடுகளையும் அட்டை வைப்பாளரிடமிருந்து மீட்பதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது.

4.5 வங்கியின் நற்பெயர் பாதிக்கப்படுவதற்கு வழிகோலும் ஏதேனும் சட்டவிரோத அல்லது அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கலுக்கு அட்டை பயன்படுத்தப்படக் கூடாது. பணம் தூயதாக்கல் எதிர்ப்புச் சட்டம் மற்றும் இலங்கைக் குடியரசிலுள்ள வேறு விதிகள், பிரமாணங்கள் மற்றும் துணைவிதிகள் உள்ளடங்களான சட்டங்களுக்கு இணங்கியொழுகும் முறையிலேயே அட்டை பயன்படுத்தப்பட வேண்டும்.

**5. கடன் உச்சவரம்புகள்**

5.1 கடன் உச்சவரம்புகள்

5.1.1 ஒவ்வொரு அட்டைக் கணக்கிற்கும் ஒரு கடன் உச்சவரம்பை வங்கி நிர்ணயிக்கும். இந்த உச்சவரம்பு கண்டிப்பாக அனுசரிக்கப்பட வேண்டும். எனினும், அட்டை வைப்பாளர் எந்த நேரத்திலும் தனது உச்சவரம்பை மீளாய்வு செய்யும்படி வங்கிக்கு வேண்டுகோள் விடுக்கலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில், வங்கி அதன் தற்றுணிபின் பேரில் கோரும் ஏதேனும் ஆவணங்களை அட்டை வைப்பாளர் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

5.1.2 உச்சவரம்பு மீறப்பட்டுள்ளதா என்பதைக் கணிக்கும்போது, இன்னமும் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படாத ஏதேனும் அட்டைக் கொடுக்கல் வாங்கல் தொகை, உத்தேச கொடுக்கல் வாங்கல் ஒன்று தொடர்பில் ஒரு மூன்றாம் தரப்புக்கு வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட தொகை, அட்டை வைப்பாளரின் வேண்டுகோளுக்கு அமைவாக ஒரு எதிர்காலக் கொடுக்கல் வாங்கலுக்கென வங்கியினால் ஒதுக்கிவைக்கப்பட்ட தொகை என்பவற்றையும் வங்கி கருத்திற்கு எடுத்துக்கொள்ளும்.

5.1.3 இந்த ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டாலும், அட்டை தொடர்பில் வங்கியினால் வழங்கப்பட்ட சகல கடன் வசதிகளுக்கும் அவை தொடர்பான சகல அறவீடுகளுக்கும் அட்டை வைப்பாளர் பொறுப்பாளியாவார்..

5.2 ஒருங்கிணைக்கப்பட்ட கடன் உச்சவரம்பு

5.2.1 அட்டை வைப்பாளர் ஒன்றிற்கு மேற்பட்ட அட்டைக் கணக்குகளை வைத்திருப்பதுடன், அவை ஒருங்கிணைக்கப்பட்ட கணக்குகளென வங்கிக்கு எழுத்தில் அறிவிக்கப்பட்டுமிருக்கும் பட்சத்தில், சகல அட்டைக் கணக்குகளிலுமுள்ள நடப்பு மீதிக்காக அனுமதிக்கப்பட்ட ஆகக்கூடிய தொகையே ஒருங்கிணைக்கப்பட்ட கடன் உச்சவரம்பாகும்.

5.2.2 நடப்பு மீதி என்பது அட்டைக் கணக்கு(கள்) மற்றும்/அல்லது இந்த ஒப்பந்தம் தொடர்பில் ஏதேனும் நேரத்தில் வங்கிக்குச் செலுத்த வேண்டியதாவிருந்த வாடிக்கையாளரின் மொத்தப் பொறுப்பு நிலுவைகளைக் குறிக்கும். இப்போது உறப்படும் அல்லது எதிர்காலத்தில் உறப்படக்கூடிய அட்டைக் கொடுக்கல் வாங்கல்கள், வட்டி, அறவீடுகள், கிரயங்கள் மற்றும் செலவுகள் (சட்டச் செலவுகளும் உட்படும்) அனைத்தும் இவற்றில் உள்ளடங்கும்.

5.2.3 சரத்து 15.2க்கு உட்பட்டதாக, அட்டை வைப்பாளர் அவரது நடப்பு மீதி எந்தவொரு நேரத்திலாவது ஒருங்கிணைக்கப்பட்ட கடன் உச்சவரம்பை மீறக்கூடிய முறையில் அட்டையை/அட்டைகளை பயன்படுத்தக் கூடாது.

5.2.4 ஒருங்கிணைக்கப்பட்ட கடன் உச்சவரம்பு மீறப்பட்டுள்ளதா என்பதைக் கணிக்கும்போது, இன்னமும் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படாத ஏதேனும் அட்டைக் கொடுக்கல் வாங்கல் தொகை, உத்தேச கொடுக்கல் வாங்கல் ஒன்று தொடர்பில் ஒரு மூன்றாம் தரப்புக்கு வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட தொகை, அட்டை வைப்பாளரின் வேண்டுகோளுக்கு அமைவாக ஒரு எதிர்காலக் கொடுக்கல் வாங்கலுக்காக வங்கியினால் ஒதுக்கிவைக்கப்பட்ட தொகை என்பவற்றையும் வங்கி கருத்திற்கு எடுத்துக்கொள்ளும்.

5.2.5 அட்டை வைப்பாளர், முன்னனுமதி பெற்றோ பெறாமலோ, ஒருங்கிணைக்கப்பட்ட கடன் உச்சவரம்பை மீறும் விதத்தில் ஏதேனும் கொடுக்கல் வாங்கலை மேற்கொண்டால், ஒருங்கிணைக்கப்பட்ட கடன் உச்சவரம்பிற்கு மேலதிகமான தொகையை, வங்கி அதன் பூரண தற்றுணிபிற்கேற்பத் தீர்மானித்து, அதற்குப் பொருத்தமெனக் கருதும் வழியில் அட்டை வைப்பாளருக்கு அறிவிக்கும்போது, அவ்வாறு அறிவிக்கப்பட்ட முறையிலும் அறிவிக்கப்பட்ட கணக்கிற்கும் உடனடியாகச் செலுத்த அட்டை வைப்பாளர் கடமைப்பட்டுள்ளார். இதற்கு இணங்கியொழுக அட்டை வைப்பாளர் தவறினால், வங்கி அதன் எவையேனும் உரிமைகள் அல்லது நிவாரணங்களுக்குப் பாரபட்சமற்ற முறையில், அட்டை வைப்பாளருக்கு அறிவிக்காமலே அட்டைக் கணக்கை உடனடியாக முடிவுறுத்த உரிமை கொண்டுள்ளது.

**6. விலைப்பட்டியலிடல் மற்றும் கொடுப்பனவு**

6.1 விபரக்கூற்றுத் திகதி (“விபரக்கூற்றுத் திகதி”) எனப்படும் ஒவ்வொரு பட்டியலிடல் காலப்பகுதியின் (“பட்டியலிடல் காலம்”) முடிவிலும் வங்கியானது வாடிக்கையாளருக்கு விபரக்கூற்று ஒன்றை அனுப்பும். இந்த விபரக்கூற்றில் அட்டைக் கணக்கின் பேரில் நிலுவையாகவுள்ள மொத்தத் தொகை (“மொத்த நிலுவை”), மொத்த நிலுவை தொடர்பில் நடப்புப் பட்டியலிடல் காலத்திற்கென அட்டை வைப்பாளர் செலுத்த வேண்டிய “குறைந்தபட்சக் கொடுப்பனவு”, வங்கிக்குக் கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதி (“கொடுப்பனவு செலுத்த வேண்டிய திகதி”) ஆகியவற்றின் விபரங்கள் தெரிவிக்கப்பட்டிருக்கும்.

செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்சக் கொடுப்பனவு என்பது மொத்த நிலுவையில் 5 சதவீதம், 250 இலங்கை ரூபாய் என்பவற்றில் எது கூடியதோ அத் தொகையாக, அல்லது மொத்த நிலுவை அட்டை வைப்பாளரின் கடன் உச்சவரம்பை மீறுமாயின், கடன் உச்சவரம்பின் 5 சதவீதத்தையும் மொத்த நிலுவை கடன் உச்சவரம்பை எவ்வளவால் மீறியுள்ளதோ அதனையும் உள்ளடக்கிய தொகையாக இருக்கும். செலுத்தப்பட வேண்டிய மொத்தக் குறைந்தபட்ச கொடுப்பனவில், முன்னைய பட்டியலிடல் காலத்தில்(காலங்களில்) செலுத்தப்படாத ஏதேனும் குறைந்தபட்சக் கொடுப்பனவுத் தொகைகளும் அடங்கியிருக்கும். வங்கிக்குச் செலுத்தப்படும் ஏதேனும் கொடுப்பனவு, வங்கியினால் அறிவிக்கப்பட்ட முகவரியில் கிடைக்கப்பெற்று, அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்பட்ட பின்பே செல்லுபடியாகும். பணமாகச் செலுத்தப்படும் கொடுப்பனவைச் செயற்படுத்த குறைந்தபட்சம் ஒரு வேலை நாள் எடுக்கும். காசோலை மூலம் செலுத்தப்படும் கொடுப்பனவு, அக் காசோலை தேறிய பின்பே அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

6.2 அட்டைக் கணக்குத் தொடர்பில் அட்டை வைப்பாளரினால் வங்கிக்குச் செலுத்தப்படும் பணம், இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் அட்டை வைப்பாளரின் வங்கிக்கான பொறுப்புகளை ஈடுசெய்வதற்கு, வங்கியினால் தீர்மானிக்கப்படக்கூடிய ஓர் ஒழுங்கிலேயே பிரயோகிக்கப்படும்.

6.3 இந்த ஒப்பந்தத்தின் கீழான சகல கொடுப்பனவுகளும் இலங்கை ரூபாயிலேயே செலுத்தப்பட வேண்டும். இலங்கை ரூபாய் தவிர்ந்த வேறொரு நாணயத்தில் கொடுப்பனவு செலுத்தப்படுமாயின், வங்கியானது அதன்

வழமையான நடைமுறைக்கு இணங்கவும் பூரண தற்றுணிபின் பேரிலும், அப்போது நடைமுறையிலிருந்த வீதத்தில், அதனை இலங்கை ரூபாயாக மாற்றும். நாணயப் பரிவர்த்தனை தொடர்பில் ஏற்படக்கூடிய இடர்கள், இழப்புகள், தரகுப்பணம், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் அனைத்தையும் அட்டை வைப்பாளர்(கள்) பொறுப்பேற்க வேண்டும்.

6.4 அட்டைக் கொடுக்கல் ஒன்றின் தொடர்பான ஏதேனும் மீளளிப்பு, அல்லது ஏதேனும் கொடுப்பனவு அல்லது அட்டை வைப்பாளருக்கான வேறேதும் வரவுகள், அத்தகைய மீளளிப்பு, கொடுப்பனவு அல்லது வரவுகள் இலங்கையில் கிடைத்த பின்பு, தேவைப்படின் இலங்கை ரூபாயாக மாற்றப்பட்டு, வங்கியின் வழமையான நடைமுறைக்கேற்ப வங்கியினால் தீர்மானிக்கப்படும் வேளையில் வங்கியினால் அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படும். இது இந்த ஒப்பந்தத்திற்கு உட்பட்டதாக இருக்கும் என்பதுடன், வங்கி வேறு விதமாகத் தீர்மானிக்காவிட்டால், இப் பணம் அட்டை வைப்பாளருக்கு வழங்கப்படாமல், நடப்பு நிலுவையை முழுமையாக அல்லது பகுதியளவில் தீர்ப்பதற்குப் பிரயோகிக்கப்படும்.

6.5

6.5.1 அட்டை வைப்பாளரின் நிலுவையாகவுள்ள கடன் அட்டை "பில" தொகையில் குறிப்பிட்டதொரு சதவீதத்தை உரிய கொடுப்பனவுத் திகதியில் அட்டைக் கணக்கிற்குச் செலுத்தும் முகமாக, வங்கியிலுள்ள அட்டை வைப்பாளரின் நடைமுறைக் கணக்கில் அல்லது சேமிப்புக் கணக்கில் (குறித்துரைக்கப்பட்ட தீர்ப்பனவுக் கணக்கு) நேரடிக் பற்று வைப்பதற்கு எழுத்துமூல நிலையான அறிவுறுத்தல்களை அட்டை வைப்பாளர் வழங்க முடியும்.

6.5.2 அத்தகைய ஏதேனும் அறிவுறுத்தலுக்கு ஏதேனும் திருத்தம் மற்றும்/அல்லது இரத்துச்செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டுமானால், அது பற்றிய அறிவித்தல் அடுத்த கொடுப்பனவுத் திகதிக்குக் குறைந்தபட்சம் இரண்டு வாரங்கள் முன்பதாக வங்கிக்குக் கிடைக்க வேண்டும் என்பதை அட்டை வைப்பாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

6.5.3 குறித்துரைக்கப்பட்ட தீர்ப்பனவுக் கணக்கில் நேரடிப் பற்று வைப்பதற்காக நிலையான அறிவுறுத்தலுக்கு, பின்வரும் மேலதிக விதிகளும் நிபந்தனைகளும் பிரயோகிக்கப்படும்.

6.5.4 சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகள் அல்லது வங்கியுடனான வேறேதும் ஏற்பாடுகளுக்கு எதிராக அத்தகைய ஏதேனும் நிலையான அறிவுறுத்தல்களுக்கு முன்னுரிமை அளிப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்கும் உரிமை வங்கிக்கே உண்டு என்பதை அட்டை வைப்பாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

6.5.5 அறிவுறுத்தலைச் செயற்படுத்துவதற்குப் போதுமான பணம் உரிய கொடுப்பனவுத் திகதிக்கு ஒரு நாள் முன்பதாகவே குறித்துரைக்கப்பட்ட தீர்ப்பனவுக் கணக்கிற்கு வழங்கப்பட வேண்டும் என்பதை அட்டை வைப்பாளர் ஏற்றுக்கொள்கின்றார். தீர்ப்பனவுக் கணக்கில் போதிய பணம் இல்லாவிட்டால், நிலையான அறிவுறுத்தல்களுக்கேற்ப கொடுப்பனவுத் தொகைகளை ஈடுசெய்வதற்காக, வங்கியானது காலத்திற்குக் காலம் தனது தற்றுணிபின் பேரில் மேலதிகப் பற்றுகளை வழங்கக்கூடும் என்பதை அட்டை வைப்பாளர் ஏற்றுக்கொண்டு, அதற்கு உடன்படுகின்றார். வங்கி கோரும்போது சகல நிலுவைத் தொகைகளையும் காலத்திற்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்திலான நிதி அறவீடுகள் உள்ளிட்ட சகல அறவீடுகள், கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளையும் மீளளிப்பதற்கு அட்டை வைப்பாளர் பிணிக்கப்பட்டுள்ளார்.

6.5.6 வங்கியிலுள்ள குறித்துரைக்கப்பட்ட தீர்ப்பனவுக் கணக்கிற்கான நேடிப் பற்றுத் தொகையைக் கணிக்கும்போது, விபரக்கூற்றுத் திகதிக்கும் உரிய கொடுப்பனவுத் திகதிக்கும் இடையே செலுத்தப்பட்ட இடைக்காலக் கொடுப்பனவுகள் எதுவும் கருத்திந்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது என்பதை அட்டை வைப்பாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

6.5.7 குறித்துரைக்கப்பட்ட தீர்ப்பனவுக் கணக்கில் போதிய பணம் இல்லாவிட்டால், அட்டை வைப்பாளருக்கு அறவித்துவிட்டோ அறிவிக்காமலோ நிலையான அறிவுறுத்தலை இரத்துச்செய்ய வங்கி உரிமை கொண்டுள்ளது.

6.6 இலங்கை ரூபாய் தவிர்ந்த ஏனைய நாணயங்களில் மேற்கொள்ளப்படும் அட்டைக் கொடுக்கல் வாங்கல்கள், மாற்றம் செய்யப்படும் திகதியில் வங்கியினால் தீர்மானிக்கப்படும் ஒரு பரிவர்த்தனை வீதத்தில் இலங்கை ரூபாயாக மாற்றப்பட்ட பின்பே அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும். இது தொடர்பில் ஏற்படக்கூடிய பரிவர்த்தனை இடர்கள், இழப்புகள், தரகுப்பணம், கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் அனைத்திற்கும் அட்டை வைப்பாளர்(கள்) பொறுப்பேற்க வேண்டும்.

6.7 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் காரணமான மீளளிப்பு அல்லது நேர்மாற்றம் உட்பட ஒரு கொடுக்கல் வாங்கலின் இரத்துச்செய்கை, நேர்மாற்றம் அல்லது மீளளிப்பின் விளைவாக ஏற்படக்கூடிய ஏதேனும் பரிவர்த்தனை இழப்புக்கு அட்டை வைப்பாளர் பொறுப்பாளியாவர்.

6.8 கழிப்பு அல்லது இடைநிறுத்திவைப்பு சட்டத்தினால் தேவைப்படுத்தப்பட்டாலன்றி, அட்டை வைப்பாளர் இந்த ஒப்பந்தத்தின் கீழ் வங்கிக்குச் செலுத்த வேண்டிய சகல தொகைகளையும் எவ்வித கழிவும் இடைநிறுத்திவைப்பும் (அவை ஏதேனும் எதிரீடு, எதிர் உரிமைக் கோரல், வரிகள், அறவீடுகள் அல்லது வேறெதுவாகவும் இருக்கலாம்) இல்லாமல் முழுமையாகச் செலுத்த வேண்டும். ஏதேனும் கழிப்பு அல்லது இடைநிறுத்திவைப்பு சட்டத்தின் பிரகாரம் தேவைப்படுத்தப்பட்டால், எவ்வித கழிவும் இடைநிறுத்தி வைப்பும் இல்லாமல் எமக்கு எவ்வளவு தொகை கிடைத்திருக்க வேண்டுமோ அந்த மொத்தத் தொகையும் எமக்குக் கிடைக்கக்கூடியதாக, மேலதிக தொகை ஒன்றினை நீங்கள் எமக்கு உடனடியாகச் செலுத்த வேண்டும். அதே சமயத்தில., கழிக்கப்பட்ட அல்லது இடைநிறுத்திவைக்கப்பட்ட தொகைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகார அமைப்புக்களின் உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டுகளையும் நீங்கள் எமக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

6.9 இந்த ஒப்பந்தத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்குப் பாரபட்சமற்ற முறையில், அட்டை வைப்பாளர் ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் இலங்கைக்கு வெளியே இருக்க நேர்ந்தால், அட்டைக் கணக்கிற்கான தீர்ப்பனவுகள் குறித்து தெளிவான, குறிப்பான எழுத்துமூல அறிவுறுத்தல்களை விட்டுச்செல்ல வேண்டும். அத்தகைய அறிவுறுத்தல்கள் அவர் இலங்கையிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் வங்கியின் அட்டை நிலையத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வாடிக்கையாளரினால் அவ்வாறு முறைப்படி அறிவிக்கப்படாவிட்டால் வங்கி தனது தற்றுணிபின் பேரில் அட்டையை இரத்துச் செய்துவிட உரிமை கொண்டுள்ளது.

6.10 அட்டை வைப்பாளர், அட்டைக் கணக்குத் தொடர்பாக வழங்கப்படும் ஒவ்வொரு விபரக்கூற்றையும் பரிசீலனை செய்து, அதில் ஏதேனும் தவறு இருப்பதாகக் கருதினால், விபரக்கூற்று கிடைத்த திகதியிலிருந்து இருபது (20) தினங்களுக்குள் வங்கிக்கு எழுத்தில் அறிவிக்க வேண்டும். இந்தக் காலப்பகுதிக்குப் பின்னர், விபரக்கூற்றும் அதிலுள்ள பதிவுகளும் (அறிவிக்கப்பட்ட ஏதேனும் தவறு தவிர) வங்கிக்கும் அட்டை வைப்பாளருக்கும் இடையே சரியானவை என்று முடிவாக ஏற்றுக்கொள்ளப்படும். அட்டை வைப்பாளர் வேறு விதமாக வேண்டுகோள் விடுத்திருந்தாலன்றி, சகல விபரக்கூற்றுகளும் அட்டை வைப்பாளர் கடைசியாக எழுத்து மூலம் வங்கிக்குத் தெரிவித்திருந்த முகவரிக்குச் சாதாரண தபாலில் அனுப்பப்படும். அவ்வாறு தபாலில் இடப்பட்ட எழுபத்திரண்டு (72) மணிநேரத்தினுள் அது அட்டை வைப்பாளருக்குக் கிடைத்துவிட்டதாகவும் கருதப்படும். அட்டை வைப்பாளரினால் குறித்துரைக்கப்படும் ஒரு மின்னஞ்சல் முகவரிக்கு விபரக்கூற்றுகளை அனுப்பும்படி அட்டை வைப்பாளர் வங்கியைக் கேட்க முடியும். வங்கி அதற்கிணங்க விபரக்கூற்றுகளை மின்னஞ்சல் மூலம் அனுப்பக்கூடும். அவ்வாறான மின்னஞ்சல்கள் வங்கியின் அஞ்சல் சேவையகத்திலிருந்து அனுப்பப்பட்டதும் கிடைத்துவிட்டதாகக் கருதப்படும். எனினும், இலத்திரனியல் முறையில் அனுப்பப்படும் தகவல்கள் இடைமறிக்கப்படலாம், சிதைக்கப்படலாம், இழக்கப்படலாம், அழிக்கப்படலாம், தாமதமாக அல்லது பூரணமற்றதாகக் கிடைக்கலாம் அல்லது வைரஸ்களைக் கொண்டிருக்கலாம் என்பதால், இந்த வழிமுறையின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் அளிக்க முடியாதென்பதை அட்டை வைப்பாளர் இத்தால் வெளிப்படையாகப் புரிந்துகொண்டு, ஏற்றுக்கொள்கின்றார். ஆகவே, மின்னஞ்சல் அனுப்பீட்டின் விளைவாக மின்னஞ்சலில் காணப்படக்கூடிய ஏதேனும் தவறுகள் அல்லது விடுபடுதல்களுக்கு வங்கி பொறுப்பேற்காது.

6.11 விபரக்கூற்று கிடைக்கவில்லை என்பது கொடுப்பனவைச் செலுத்தாமல் விடுவதற்கு ஒரு செல்லுபடியான காரணமாகக் கருதப்பட மாட்டாது. விபரக்கூற்று உருவாக்கப்படும் திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குள் அல்லது, ஒரு புதிய அட்டையைப் பொறுத்த வரையில், அட்டை அங்கீகரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதினான்கு (14) நாட்களுக்குள் விபரக்கூற்று கிடைக்காவிட்டால், அட்டை வைப்பாளர் வங்கிக்கு அறிவிக்க வேண்டும்.

## 7. மீளவரும் / தவணை கொடுப்பனவுகள்

அட்டையின் பேரிலான கடன் (LOC), அட்டை ∴பிளெக்ஸி திட்டம் (CFP), அட்டை மீதி மாற்றம் (CBT) ஆகிய வங்கியின் தவணை முறைத் திட்டங்கள் ஒவ்வொன்றும் விசேட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். மேற்படித் தவணைத் திட்டங்கள் இலத்திரனியல் அட்டை வைப்பாளர்களுக்காக முன்வைக்கப்பட்டுள்ளன. அட்டை வைப்பாளர்கள் மேற்படி விசேட விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில், வங்கி தனது தற்றுணிபிற்கேற்ப இந்த வசதிகளை அவர்களுக்கு வழங்கக்கூடும்.

### 7.1 அட்டையின் பேரிலான கடன் ( LOC)

7.1.1 அட்டை வைப்பாளர் தனது அட்டையின் பேரில் ரொக்க முற்பணத்தைப் பெற்று, சமமான 6, 12 அல்லது 24 மாதாந்தத் தவணைகளில் அதனைத் திருப்பிச்செலுத்த அட்டையின் பேரிலான கடன் வசதி (“LOC வசதி”) இடமளிக்கின்றது.

7.1.2 இத் திட்டத்திற்குத் தகுதி பெறுவதற்கான குறைந்தபட்ச LOC பெறுமதி இ.ரூ.10,000 ஆகும். அதிகபட்ச LOC பெறுமதி கடன் உச்சவரம்பின் 75 சதவீதம் வரைப்பட்டதாக இருக்கும். தவணைக் கொடுப்பனவுகள் சமமான மாதாந்தத் தவணைகளில் அட்டை வைப்பாளரின் கணக்கில் பற்று வைக்கப்படும். இத் தொகையில் ஒரு பகுதி LOC வசதியின் பிரதான தொகையின் மீளளிப்பாகவும் மறு பகுதி அந்த LOC வசதியைப் பெறுவதற்கு ஏற்புடைத்தான கையாளுகைக் கட்டணமாகவும் இருக்கும். அத்தகைய கையாளுகைக் கட்டணத் தொகை, www.dfcc.lk என்ற வங்கியின் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் காணப்படும் விதிப்பனவுகள் பட்டியலில் குறித்துரைக்கப்படும்.

7.1.3 LOC வசதித் தொகையானது, அட்டை வைப்பாளரின் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்பட்டு, இலங்கை ரூபாயிலான DFCC வங்கிக் காசாளர் கட்டளை (“காசாளர் கட்டளை”) வடிவத்தில் வழங்கப்படும் அல்லது DFCC வங்கியில் அட்டை வைப்பாளர் வைத்திருக்கும் குறித்துரைக்கப்பட்ட சேமிப்பு/நடைமுறை கணக்கிற்குப் பரிமாற்றம் செய்யப்படும்.

7.1.4 காசாளர் கட்டளை என்ற விருப்பத்தேர்வை அட்டை வைப்பாளர் தெரிவு செய்தால், வங்கியில் பதிவு செய்யப்பட்டுள்ள அவரின் முகவரிக்கு அக் காசுக் கட்டளை அனுப்பப்படும். காசுக் கட்டளையைப் பெறுவதில் நிகழும் ஏதேனும் தாமதத்தினால் நேரடியாக அல்லது நேரடியற்ற முறையில் அட்டை வைப்பாளருக்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்கு வங்கி பொறுப்பாளியாகாது.

7.1.5 அட்டை வைப்பாளரின் கடன் அட்டைக் கணக்கு மீதான உச்சவரம்பானது, LOC வசதியின் பிரதான தொகை மற்றும் ஏற்புடைய கையாளுகைக் கட்டணத்திற்குச் சமமான ஒரு பெறுமதியினால் தடுத்து வைக்கப்படும். அடுத்தடுத்த மாதங்களில் மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுகள் பட்டியலிடப்பட்டுச் செலுத்தப்படும்போது, இது விடுவிக்கப்பட்டு அட்டை வைப்பாளருக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

7.1.6 அட்டை வைப்பாளர் LOC வசதியின் ஏதேனும் தவணைக் கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறினால், LOC வசதியின் எஞ்சியுள்ள மொத்த மீதியையும் நிறுத்திவிட்டு, ஏற்புடைய ஏதேனும் அறவீடுகளுடன் சேர்த்து மொத்த நிலுவைத் தொகையையும் அட்டைக் கணக்கில் பற்று வைக்க வங்கி உரிமை கொண்டுள்ளது.

7.1.7 அட்டைக் கணக்கின் நிலுவைக்கு மேலதிகமாகச் செலுத்தப்படும் கொடுப்பனவு,, LOC வசதியின் இன்னமும் பட்டியலிடப்படாத தவணைக் கொடுப்பனவுகளுக்கு எதிராகத் தன்னியல்பாகவே ஈடுசெய்யப்பட மாட்டாது என்பதால், அது LOC வசதியின் ஒரு முன்கூட்டிய கொடுப்பனவாக அமைய மாட்டாது.

7.1.8 அட்டை வைப்பாளர் LOC வசதியை உரிய காலத்திற்கு முன்பே தீர்ப்பனவு செய்ய விரும்பினால், அட்டைக் கணக்கின் பேரில் பெறப்பட்ட LOC வசதியில் எஞ்சியுள்ள தொகையைத் தீர்த்துமுடிக்கும் தனது நோக்கத்தை எழுத்து மூலம் வங்கிக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய முன்கூட்டிய தீர்ப்பனவு நிகழுமாயின், எஞ்சியிருந்த பிரதான LOC வசதி நிலுவையின் 4 சதவீதம் முன்கூட்டிய தீர்ப்பனவுக் கட்டணமாக அறவிடப்படும்.

7.1.9 LOC வசதி தொடர்பில் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள், அட்டை வைப்பாளரின் ஒப்பந்தத்திலுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமானவையேயன்றி, அவற்றைத் தரங்குறைப்பவை அல்ல. LOC வசதி, அட்டை வைப்பாளர்களுக்கான ஒரு விசேட வசதியாகும். LOC வசதி தொடர்பாக இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள எதுவும் அட்டை வைப்பாளர் ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முரணாக அல்லது அவற்றைப் பாதிப்பதாக இருக்காது.

7.1.10 LOC வசதி தொடர்பில், ஏதேனும் சர்ச்சைகள் உள்ளிட்ட (ஆனால், அவை மட்டுமல்ல) எல்லா விடயங்களிலும் வங்யின் தீர்மானமே இறுதியானதாகவும் LOC வசதியைப் பெற்ற அட்டை வைப்பாளர்களைப் பிணிப்பதாகவும் இருக்கும்.

7.1.11 LOC வசதியை ஏற்றுக்கொள்வதன் மூலம் அட்டை வைப்பாளர் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவதற்கு இணங்குகின்றார்.

**7.2. அட்டை ∴பிளெக்ஸி திட்டம்**

7.2.1 அட்டை வைப்பாளர், வணிக நிறுவனமொன்றில் மேற்கொள்ளும் இ.ரூ.10,000க்கு மேல் பெறுமதியுள்ள ஒரு கொள்வனவுக் கொடுக்கல் வாங்கலை, 24 மாதங்கள் வரையிலான தவணைக் கொடுப்பனவுத் திட்டமாக மாற்ற அட்டை ∴பிளெக்ஸி திட்டம் ("CFP") இடமளிக்கின்றது. நிறுவனக் கடன் அட்டை வைத்ருப்பவர்கள் தவிர்ந்த ஏனைய அட்டை வைப்பாளர்களுக்கான இத் திட்டம் வங்கியினால் அதன் தற்றுணிபிற்கேற்ப எந்த நேரத்திலும் வாபஸ் பெறப்படலாம் அல்லது திருத்தப்படலாம்.

7.2.2 இத் திட்டத்திற்குத் தகுதி பெறுவதற்கான குறைந்தபட்ச கொடுக்கல் வாங்கல் பெறுமதி இ.ரூ.10,000 ஆகவும் அதிகபட்ச கொடுக்கல் வாங்கல் பெறுமதி இ.ரூ.400,000 ஆகவும் இருக்கும் (இனிமேல், இது "தகுதியுள்ள கொடுக்கல் வாங்கல்" என்று குறிப்பிடப்படும்).

7.2.3 குறித்துரைக்கப்பட்ட ஊக்குவிப்புத் திட்டங்களுக்கென வேறு விதமாகத் தெரிவிக்கப்பட்டாலன்றி, ஒரு தகுதியுள்ள கொடுக்கல் வாங்கலை, அக் கொடுக்கல் வாங்கலின் கொள்வனவு திகதியிலிருந்து 90 தினங்களுக்குள் மாத்திரமே ஒரு CFP திட்டமாக மாற்ற முடியும்.

7.2.4 தகுதியுள்ள கொடுக்கல் வாங்கலை, வங்கியினால் தீர்மானிக்கப்படும் ஒரு சிறிய கையாளுகைக் கட்டணத்துடன் 3, 6, 12 அல்லது 24 மாத தவணைத் திட்டமாக மாற்றிக்கொள்ளலாம்.

7.2.5 அட்டை வைப்பாளரின் கடன் அட்டைக் கணக்கு மீதான உச்சவரம்பானது, CFP வசதியின் பிரதான தொகை மற்றும் ஏற்புடைய கையாளுகைக் கட்டணத்திற்குச் சமமான ஓர் அளவுக்குத் தடுத்து வைக்கப்படும். அடுத்தடுத்த மாதங்களில் மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுகள் பட்டியலிடப்பட்டுச் செலுத்தப்படும்போது, இது விடுவிக்கப்பட்டு அட்டை வைப்பாளருக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

7.2.6 CFPயின் மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுகள் அடுத்த விபரக்கூற்றுத் திகதியில் அட்டை வைப்பாளருக்குப் பட்டியலிடப்படும்.

7.2.7 அட்டை வைப்பாளர் குறைந்தபட்ச கொடுப்பனவை உரிய கொடுப்பனவுத் திகதிக்குள் செலுத்தத் தவறினால், CFP திட்டத்தை முன்கூட்டியே நிறுத்திவிட்டு, நிலுவைத் தொகை முழுவதையும் பற்று வைக்க வங்கி உரிமை கொண்டுள்ளது.

7.2.8 அட்டைக் கணக்கு நிலுவைக்கு மேலதிகமாகச் செலுத்தப்படும் கொடுப்பனவுகள், இன்னமும் பட்டியலிடப்படாத தவணைக் கொடுப்பனவுகளுக்கு எதிராகத் தன்னியல்பாகவே ஈடுசெய்யப்பட மாட்டாது என்பதால், அது CFP வசதிக்கான ஒரு முன்கூட்டிய கொடுப்பனவாக அமையாது.

7.2.9 அட்டை வைப்பாளர் CFP தொகையை உரிய காலத்திற்கு முன்பே தீர்ப்பனவு செய்ய விரும்பினால், அட்டைக் கணக்கின் பேரிலான CFP வசதியை நிறுத்திவிடும் தனது நோக்கத்தை எழுத்து மூலம் வங்கிக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய முன்கூட்டிய தீர்ப்பனவு நிகழுமாயின், எஞ்சியிருந்த பிரதான CFP நிலுவைத் தொகையில் 4 சதவீதம் முன்கூட்டிய தீர்ப்பனவுக் கட்டணமாக அறவிடப்படும்.

7.2.10 சகல நிலுவைத் தவணைகளும் கடன் அட்டைக் கணக்கு விபரக்கூற்றில் பட்டியலிடப்படுவதற்கு முன் அட்டை வைப்பாளர் தனது கடன் அட்டையை முடிவுறுத்தினால், எஞ்சியுள்ள CFP தவணைக் கொடுப்பனவுகள் ஓர் ஒட்டுமொத்தத் தொகையாக கடன் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

7.2.11 CFP வசதியைப் பயன்படுத்துவதால் அட்டை வைப்பாளருக்கு ஏற்படும் அல்லது அவரால் உறப்படும் ஏதேனும் சட்ட நடவடிக்கைகள், உரிமைக் கோரல்கள், இழப்புகள், சேதங்கள், அறவீடுகள் மற்றும் செலவுகளுக்கு அட்டை வைப்பாளர் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது.

7.2.12 CFP தொடர்பில் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள், அட்டை வைப்பாளரின் ஒப்பந்தத்திலுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமானவையேயன்றி, அவற்றைத் தரங்குறைப்பவை அல்ல. CFP என்பது அட்டை வைப்பாளர்களுக்கான ஒரு விசேட வசதியாகும். CFP தொடர்பாக இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள எதுவும் அட்டை வைப்பாளர் ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முரணாக அல்லது அவற்றைப் பாதிப்பதாக இருக்காது.

7.2.13 CFP தொடர்பில், ஏதேனும் சர்ச்சைகள் உள்ளிட்ட (ஆனால், அவை மட்டுமல்ல) எல்லா விடயங்களிலும் வங்யின் தீர்மானமே இறுதியானதாகவும் CFP வசதியைப் பெற்ற அட்டை வைப்பாளர்களைப் பிணிப்பதாகவும் இருக்கும்.

7.2.14 அட்டை வைப்பாளர் CFP வசதியை ஏற்றுக்கொள்வதன் மூலம் அட்டை வைப்பாளர் ஒப்பந்தத்தின் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் வங்கியின் தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க இணங்குகின்றார்.

**7.3. அட்டை மீதி மாற்ற வசதி (CBT)**

7.3.1 அட்டை வைப்பாளர் வேறொரு வங்கியில் வைத்திருக்கும் கடன் அட்டை மீதியை DFCC கடன் அட்டைக் கணக்கிற்கு மாற்ற அட்டை மீதி மாற்ற வசதி ("CBT வசதி") இடமளிக்கின்றது. வேறு வங்கிக் கடன் அட்டைகளையும் வைத்திருக்கும் அட்டை வைப்பாளர்கள் இந்த வசதியைப் பெற்றுக்கொள்ளலாம்.

7.3.2 குறைந்தபட்ச மீதி மாற்றத் தொகை இ.ரூ.20,000 ஆகவும் கூடியபட்ச மீதி மாற்றத் தொகை அட்டை வைப்பாளரின் கடன் உச்சவரம்பில் 75 சதவீதம் வரையானதாகவும் இருக்கும்..

7.3.3 மீதி மாற்றத் தொகையை, வங்கியினால் தீர்மானிக்கப்படும் ஒரு சிறிய கையாளுகைக் கட்டணத்துடன் 12 அல்லது 24 மாதத் தவணைத் திட்டமாக மாற்றிக்கொள்ள முடியும்.

7.3.4 அட்டை வைப்பாளரின் கடன் அட்டைக் கணக்கு மீதான உச்சவரம்பானது, CBT வசதியின் பிரதான தொகை மற்றும் ஏற்புடைய கையாளுகைக் கட்டணத்திற்குச் சமமான ஓர் அளவுக்குத் தடுத்து வைக்கப்படும். அடுத்தடுத்த மாதங்களில் மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுகள் பட்டியலிடப்பட்டுச் செலுத்தப்படும்போது, இது விடுவிக்கப்பட்டு அட்டை வைப்பாளருக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

7.3.5 CBT வசதியின் மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுகள் அடுத்த விபரக்கூற்றுத் திகதியில் அட்டை வைப்பாளருக்குப் பட்டியலிடப்படும்.

7.3.6 அட்டை வைப்பாளர் குறைந்தபட்ச கொடுப்பனவை உரிய கொடுப்பனவுத் திகதிக்குள் செலுத்தத் தவறினால், CBT திட்டத்தை முன்கூட்டியே நிறுத்திவிட்டு, நிலுவைத் தொகை முழுவதையும் பற்று வைக்க வங்கி உரிமை கொண்டுள்ளது. அட்டைக் கணக்கு நிலுவைக்கு மேலதிகமாகச் செலுத்தப்படும் கொடுப்பனவுகள், இன்னமும் பட்டியலிடப்படாத தவணைக் கொடுப்பனவுகளுக்கு எதிராகத் தன்னியக்கமாகவே ஈடுசெய்யப்பட மாட்டாது என்பதால், அது CBT வசதிக்கான ஒரு முன்கூட்டிய கொடுப்பனவாக அமைய மாட்டாது.

7.3.7 அட்டை வைப்பாளர் CBT வசதியை உரிய காலத்திற்கு முன்பே தீர்ப்பனவு செய்ய விரும்பினால், அட்டைக் கணக்கின் பேரில் பெறப்பட்ட CBT வசதியில் எஞ்சியுள்ள தொகையை தீர்த்துமுடிக்கும் தனது நோக்கத்தை எழுத்து மூலம் வங்கிக்கு அறிவிக்க வேண்டும். அத்தகைய முன்கூட்டிய தீர்ப்பனவு நிகழுமாயின், எஞ்சியிருந்த பிரதான CBT வசதி நிலுவையின் 4 சதவீதம் முன்கூட்டிய தீர்ப்பனவுக் கட்டணமாக அறவிடப்படும்.

7.3.8 சகல நிலுவைத் தவணைகளும் கடன் அட்டைக் கணக்கு விபரக்கூற்றில் பட்டியலிடப்படுவதற்கு முன் அட்டை வைப்பாளர் தனது கடன் அட்டையை முடிவுறுத்தினால், எஞ்சியுள்ள CBT தவணைக் கொடுப்பனவுகள் ஓர் ஒட்டுமொத்தத் தொகையாக கடன் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

7.3.9 CBT வசதியைப் பயன்படுத்துவதால் அட்டை வைப்பாளருக்கு ஏற்படும் அல்லது அவரால் உறப்படும் ஏதேனும் சட்ட நடவடிக்கைகள், உரிமைக் கோரல்கள், இழப்புகள், சேதங்கள், அறவீடுகள் மற்றும் செலவுகளுக்கு அட்டை வைப்பாளர் வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது.

7.3.10 CBT தொடர்பில் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள், அட்டை வைப்பாளரின் ஒப்பந்தத்திலுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமானவையேயன்றி, அவற்றைத் தரங்குறைப்பவை அல்ல. CBT என்பது அட்டை வைப்பாளர்களுக்கான ஒரு விசேட வசதியாகும். CBT தொடர்பாக இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள எதுவும் அட்டை வைப்பாளர் ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முரணாக அல்லது அவற்றைப் பாதிப்பதாக இருக்காது.

7.3.11 CBT தொடர்பில், ஏதேனும் சர்ச்சைகள் உள்ளிட்ட (ஆனால், அவை மட்டுமல்ல) எல்லா விடயங்களிலும் வங்யின் தீர்மானமே இறுதியானதாகவும் CBT வசதியைப் பெற்ற அட்டை வைப்பாளர்களைப் பிணிப்பதாகவும் இருக்கும்.

7.3.12 அட்டை வைப்பாளர் CBT வசதியை ஏற்றுக்கொள்வதன் மூலம் அட்டை வைப்பாளர் ஒப்பந்தத்தின் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் வங்கியின் தீர்மானங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்க இணங்குகின்றார்.

**8. கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்**

**(அட்டையின் வகையைப் பொறுத்து, சில அறவீடுகள் காலத்திற்குக் காலம் தள்ளுபடி செய்யப்படலாம். தயவுசெய்து ஒவ்வொரு திட்டத்திற்கும் ஏற்புடைய விதிப்பனவுகள் பற்றிய விபரங்களைப் பாருங்கள். (பூரணமான விதிப்பனவுகள் வழிகாட்டியைப் பார்வையிட www.dfcc.lk என்ற வலைத்தளத்தில் பிரவேசியுங்கள்.)**

8.1 அட்டைக்கான சேர்வுக் கட்டணம், வருடாந்தக் கட்டணம் என்பவற்றைச் செலுத்த அட்டை வைப்பாளர் இணங்குகின்றார். இக' கட்டணங்கள், செலுத்தப்பட வேண்டிய வேளைகளில் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

8.2 அட்டையானது ஒரு வெளிநாட்டு முகவரிக்கு அனுப்பீட்டுச் சேவை (Courier) மூலம் அனுப்பப்படும்போது, வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்தில் கையாளுகைக் கட்டணம் ஒன்று அறவிடப்படும்.

8.3 விபரக்கூற்றின் பிரதிகளுக்காக, வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்தில் கையாளுகைக் கட்டணம் ஒன்று அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

8.4 அட்டை வைப்பாளர் உரிய கொடுப்பனவுத் திகதிக்குள் மொத்த நிலுவைத் தொகையையும் செலுத்தாவிட்டால், வங்கியினால் தீர்மானிக்கப்பட்டு, www.DFCC.lk என்ற வலைத்தளத்தில் பிரசுரிக்கப்படும் விதிப்பனவுகள் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் (அல்லது வங்கியினால் எழுத்து மூலம் அறிவிக்கப்படும்) வீதத்தில் வட்டி அறவிடப்படும். இந்த வட்டியானது, நடப்பு விபரக்கூற்று மாதத்தின் முதலாவது நாளிலிருந்து அடுத்த விபரக்கூற்றுத் திகதி வரையான விபரக்கூற்று நிலுவையின் அடிப்படையில் நாளாந்தம் கணிக்கப்படும். மேற்குறிப்பிட்ட காலத்தில் பெறப்படும் ''பில்''கள் வட்டியைக் கணிக்கும் நோக்கத்திற்காகக் கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட மாட்டா. எனினும், செலுத்தப்படும் கொடுப்பனவுகள் இந்த நோக்கத்திற்காகக் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

8.5 அட்டை வைப்பாளர் உரிய கொடுப்பனவுத் திகதிக்குள் குறைந்தபட்ச தொகையைச் செலுத்தத் தவறினால், மேலே சரத்து 8.4இல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டிக் கொடுப்பனவுக்குப் பாரபட்சமற்ற விதத்தில் காலத்திற்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்பட்டு, www.DFCC.lk என்ற வலைத்தளத்தில் பிரசுரிக்கப்படும் விதிப்பனவுகள் அட்டவணையில் குறித்துரைக்கப்படும் வீதத்தில் அல்லது வீதங்களில் தாமதக் கட்டணமொன்று விதிக்கப்பட்டு, அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

8.6 சகல ரொக்க முற்பணங்கள் தொடர்பிலும் ஒரு ரொக்க முற்பணக் கட்டணம் மற்றும்/அல்லது கையாளுகைக் கட்டணம் விதிக்கப்பட்டு, அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும். வங்கியினால் தீர்மானிக்கப்பட்டு வாடிக்கையாளருக்கு எழுத்தில் அறிவிக்கப்படும் ஏதேனும் மாற்றங்களுக்கு உட்பட்ட வகையில், இக் கட்டணம் முற்பணத் தொகையின் 3 சதவீதமாக இருக்கும். ஒதுக்கப்பட்ட உச்சவரம்பு, பட்டியலிடும் காலப்பகுதியின் ஏதேனும் நேரத்தில் மீறப்படுமாயின், வங்கியினால் தீர்மானிக்கப்படும் உச்சவரம்பு மீறல் கட்டணமொன்று விதிக்கப்பட்டு, அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

8.7 இந்த நோக்கத்திற்காக, உச்சவரம்பு மீறப்பட்டுள்ளதா என்பதைக் கணிக்கும்போது வங்கி அறவீடுகள் என்ற வகையில் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும் சகல தொகைகளும் கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

8.8 இலங்கையிலுள்ள எரிபொருள் நிலையங்களில் கொள்வனவு செய்யப்படும் பெற்றோல், டீசல், எரிவாயு மற்றும் சகல பண்டங்கள் தொடர்பிலும் கையாளுகைக் கட்டணமொன்று விதிக்கப்பட்டு, பண்டத்தின் பெறுமதியில் 2 சதவீதம் என்ற அடிப்படையில் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும். இது காலத்திற்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படும் மாற்றங்களுக்கு உட்படலாம்.

8.9 அட்டையின் மூலம் வெளிநாட்டில் (இலங்கைக்கு வெளியிலுள்ள ஒரு நாட்டில்) மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பிலும் சகல சட்டபூர்வ விதிப்பனவுகளும் அட்டை வைப்பாளரின் அட்டைக் கணக்கிலிருந்து அறவிடப்படும். இச் சட்டபூர்வ விதிப்பனவுகள், காலத்திற்குக் காலம், அட்டை வைப்பாளருக்கு அறிவிக்கப்படாமலே, மாற்றம் செய்யப்படலாம்.

8.10 அட்டைக் கணக்கில் வரவு வைக்கப்படுவதற்கென அட்டை வைப்பாளரினால் வைப்புச் செய்யப்படும் பணத் தொகை, கொடுப்பனவு செலுத்தப்படாத ஒவ்வொரு விபரக்கூற்று தொடர்பிலும் முறையே சட்டபூர்வ விதிப்பனவுகள், வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள், அறவீடுகள் மற்றும் கட்டணங்கள், அட்டை வைப்பாளரினால் பெறப்பட்ட முற்பணத் தொகைகள் என்பவற்றைக் கழித்துக்கொள்வதற்கே முதலில் பிரயோகிக்கப்படும். அதன் பின்பு எஞ்சும் தொகையே, அட்டைப் பயன்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அட்டை விபரக்கூற்றில் காட்டப்பட்டுள்ள நிலுவைகளைக் குறைப்பதற்குப் பிரயோகிக்கப்படும்.

**9. மேலதிக அட்டைகள்**

அட்டை வைப்பாளர் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில், வங்கியானது தனது தற்றுணிபிற்கேற்ப, பிரதான அட்டை வைப்பாளரினால் நியமிக்கப்படும் அவரது உடனடிக் குடும்ப அங்கத்தவர்களுக்குத் துணை அட்டைகளை வழங்கக்கூடும். அட்டைக் கணக்குகள் இணைக்கப்பட்டவையாக இருந்தாலும் வெவ்வேறாக இருந்தாலும், அட்டை மற்றும் துணை அட்டைகளின் பாவனைக்கு பிரதான அட்டை வைப்பாளரும் துணை அட்டை வைப்பாளர்களும் கூட்டாகவும் தனித்தனியாகவும் பொறுப்பாளியாவார்கள். துணை அட்டை வைப்பாளர் ஒவ்வொருவரும் இந்த ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் பிணிக்கப்படுவார். பிரதான அட்டை வைப்பாளர் தனக்குரிய அதே கடன் உச்சவரம்பை அல்லது குறைவான கடன் உச்சவரம்பை தனது தற்றுணிபிற்கேற்ப துணை அட்டை வைப்பாளர்களுக்கு ஒதுக்கலாம்.

9.1 பிரதான அட்டை வைப்பாளருக்கு அல்லது துணை அட்டை வைப்பாளருக்கு அனுப்பப்பட்ட அல்லது வழங்கப்பட்ட சகல தொடர்பாடல்களும் அவர்கள் இருசாராருக்கும் அனுப்பப்பட்டவையாக அல்லது வழங்கப்பட்டவையாகக் கருதப்படும்.

9.2 பிரதான அட்டை வைப்பாளரினால் அல்லது துணை அட்டை வைப்பாளர்களினால் அல்லது அட்டைக் கணக்கைச் செயற்படுத்துவதற்கென பிரதான அட்டை வைப்பாளர் எழுத்தில் அதிகாரமளித்த ஒரு மூன்றாம் தரப்பினால் விடுக்கப்பட்ட அல்லது விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் சகல அறிவுறுத்தல்களினாலும் வேண்டுகோள்களினாலும் பிணிக்கப்படுவதற்கு பிரதான அட்டை வைப்பாளரும் ஒவ்வொரு துணை அட்டை வைப்பாளரும் இணங்குகின்றார். பிரதான அட்டை வைப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட மூன்றாம் தரப்பின் அறிவுறுத்தல்களுக்கேற்ப செயற்படுவதன் விளைவாக ஏதேனும் வகையில் வங்கிக்கு ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பு, சேதம், உரிமைக் கோரல் அல்லது செலவுகளுக்கு எதிராக பிரதான அட்டை வைப்பாளர் வங்கிக்கு இழப்பெதிர்காப்பை வழங்குகின்றார்.

9.3 ஒருங்கிணைக்கப்பட்ட கடன் உச்சவரம்பு, பிரதான அட்டை வைப்பாளருக்கும் சகல துணை அட்டை வைப்பாளர்களுக்கும் கூட்டாக ஏற்புடையதாகும். பிரதான அட்டை வைப்பாளரும் சகல துணை அட்டை வைப்பாளர்களும், அவர்களால் தனித்தனியே உறப்படும் நடப்பு நிலுவையானது, ஒருங்கிணைக்கப்பட்ட கடன் உச்சவரம்பை மீறக்கூடிய விதத்தில் எவ்வித அட்டைக் கொடுக்கல் வாங்கல்களையும் செய்யக் கூடாது.

9.4 சரத்து 21ஐ பாதிக்காத விதத்தில், இந்த ஒப்பந்தத்தின் கீழ் அல்லது அதற்கு முன்னோடியாக, வங்கியின் உரிமைகளைப் பிரயோகிக்கும் ஒரு நடைமுறையாக, பிரதான அட்டை வைப்பாளர் பற்றிய அல்லது அட்டைக் கணக்குப் பற்றிய விபரங்களை துணை அட்டை வைப்பாளர்களுக்கும் வங்கி பொருத்தமெனக் கருதுவதற்கிணைங்க பிரதான அட்டை வைப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு ஆட்களுக்கும் தனது பூரண தற்றுணிபிற்கேற்ப வெளியிட வங்கிக்குப் பிரதான அட்டை வைப்பாளர் இத்தால் அதிகாரமளிக்கின்றார்.

9.5 சரத்து 11.1க்கு அமைவாக, பிரதான அட்டை வைப்பாளர் எந்த நேரத்திலும் ஏதேனும் துணை அட்டையின் பாவனையை முடிவுறுத்த முடியும் என்பதுடன், துணை அட்டை வைப்பாளரும் எந்த நேரத்திலும் தனது துணை அட்டையின் பாவனையை முடிவுறுத்தலாம். எனினும், அத்தகைய துணை அட்டை வங்கிக்குத் திருப்பிக்கிடைக்கும் வரை, துணை அட்டையின் பாவனையை முடிவுறுத்தும்படி பிரதான அட்டை வைப்பாளர் அல்லது எவரேனுமொரு துணை அட்டை வைப்பாளர் விடுத்த அறிவுறுத்தலுக்கு வங்கி கட்டுப்படவோ இணங்கி நடக்கவோ மாட்டாது. அத்தகைய துணை அட்டையின் பாவனை முடிவுறுத்தப்பட்டாலும், இந்த ஒப்பந்தத்தின் கீழ் பிரதான அட்டை வைப்பாளரும் துணை அட்டை வைப்பாளர்களும் வங்கிக்குக் கொண்டுள்ள கடப்பாடுகளும் பொறுப்புகளும் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும்.

9.6 பிரதான அட்டை வைப்பாளரும் துணை அட்டை வைப்பாளரும் அவர்களுக்கிடையே எத்தகைய பிணக்குகள், எதிரெதிர் உரிமைக் கோரல்கள் அல்லது எதிரீட்டு உரிமைகளைக் கொண்டிருந்தாலும், இந்த ஒப்பந்தத்தின் கீழ் வங்கிக்கான அவர்களின் வாக்குறுதிகள், பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் எதுவும் எவ்விதத்திலும் பாரபட்சப்படுத்தப்படவோ அல்லது பாதிக்கப்படவோ மாட்டா.

9.7 ஏதேனும் காரணத்திற்காக துணை அட்டை வைப்பாளரின் ஏதேனும் பொறுப்பு நீக்கப்பட்டாலும் அல்லது தள்ளுபடி செய்யப்பட்டாலும், பிரதான அட்டை வைப்பாளரின் வாக்குறுதிகள், பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் அல்லது பிரதான அட்டை வைப்பாளருக்கு எதிராக வங்கிக்குள்ள உரிமைகள் மற்றும் நிவாரணங்களும் வங்கிக்கு எதிராக அவருக்குள்ள உரிமைகள் உரிமைகள் மற்றும் நிவாரணங்களும் எவ்விதத்திலும் பாதிக்கப்படவோ புறக்கணிக்கப்படவோ மாட்டா.

**10. DFCC வங்கி ATM இயந்திரத்தின் பாவனை**

10.1 அட்டை வைப்பாளர்கள் தமது அட்டைக் கணக்குத் தொடர்பாகவும் கடன் அட்டையுடன் இணைக்கப்பட்டதாக அவர்கள் வங்கியில் வைத்திருக்கும் வேறு கணக்குகள் தொடர்பாகவும் தமது அட்டைகளை DFCC வங்கியின் ATM இயந்திரங்களிலும் கொடுக்கல் வாங்கல்களுக்காக அட்டையை ஏற்கொள்ளும் வேறு ATM இயந்திரங்களிலும் பயன்படுத்த முடியும்.

10.2 DFCC வங்கியின் ATM அல்லது வேறேதும் ATMகள் ஊடாக அட்டை வைப்பாளரின் நடைமுறை/சேமிப்புபு கணக்கிலிருந்து வசதிகளைப் பெறுவதற்காக அட்டையைப் பயன்படுத்தும் செயலானது, DFCC வங்கியினால் அட்டைக்கெனப் பரிந்துரைக்கப்பட்டுள்ள சேவைகள்/வசதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தையும் ஆட்சி செய்யும் நடைமுறையிலுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்கும்.

10.3 அட்டை வைப்பாளரின் அறிவு அல்லது அதிகாரமளிப்புடனோ அவ்வாறில்லாமலோ அட்டையைப் பயன்படுத்தி ATMகள் ஊடாக மேற்கொள்ளப்படும் சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டை வைப்பாளர்கள் பொறுப்பாளியாவார்கள். அட்டை வைப்பாளர் ATMகள் ஊடாக தனது அட்டைக் கணக்கிலிருந்து அல்லது அட்டையுடன் இணைக்கப்பட்ட தனது வேறு கணக்கிலிருந்து பணத்தை மீளப் பெறும்போது, வங்கியானது அதற்கேற்ற முறையில் அட்டைக் கணக்கில் அல்லது இணைக்கப்பட்ட மற்றைய கணக்கில் பற்று வைக்கும். பிரதான அட்டை வைப்பாளரின் வேண்டுதலுக்கிணங்க மேலதிக அட்டைகள் வழங்கப்பட்டிருக்கும் பட்சத்தில், ATM ஊடான அட்டைப் பாவனை தொடர்பிலான ஏதேனும் அறவீடுகளுக்கு அட்டை வைப்பாளரும் மேலதிக அட்டை வைப்பாளர்களும் கூட்டாகவும் தனித்தனியாகவும் வங்கிக்குப் பொறுப்பாளியாவார்கள்.

10.4 அட்டை வைப்பாளரின் நடைமுறை/சேமிப்பு கணக்கு தொடர்பான சகல கொடுக்கல் வாங்கல்களினதும் வங்கிப் பதிவேடுகள் முடிவானவை மற்றும் எல்லா நோக்கங்களுக்காகவும் அட்டை வைப்பாளரைப் பிணிப்பவை என்பதை அட்டை வைப்பாளர் ஏற்றுக்கொள்கின்றார்.

10.5 அட்டை வைப்பாளரினால் ATMஇல் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏதேனும் சர்ச்சை எழுமாயின், வங்கி அதனை விசாரிக்கும். வங்கிக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் வேறு விதமாக நிரூபிக்கப்படாவிட்டால், அக் கொடுக்கல் வாங்கல் அட்டை வைப்பாளரின் பொறுப்புக்களில் சேர்க்கப்படும். ATM கொடுக்கல் வாங்கலில் PIN இலக்கம் பயன்படுத்தப்படுகின்றது என்பதால், அட்டையின் தொலைவு அறிவிக்கப்பட்டதைக் காரணமாகக் காட்டி இப் பொறுப்பை இடைநிறுத்தவோ அல்லது இரத்துச் செய்யவோ முடியாது. PIN இலக்கத்தை மிகவும் பாதுகாப்பாகவும் அட்டையிலிருந்து வேறாகவும் வைக்கும்படி அட்டை வைப்பாளர்களுக்குக் குறிப்பாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதால், அவர்கள் அவ்வாறு செய்யத் தவறுவது அவர்கள் பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ளார்கள் கருதப்படும்.

**11. முடிவுறுத்தல்**

11.1 அட்டை வைப்பாளர் எழுத்துமூல அறிவித்தலை வழங்குவதுடன் அட்டை மற்றும் ஏதேனும் மேலதிக அட்டைகளை வங்கிக்கு மீளளிப்பதன் மூலம் எந்த நேரத்திலும் இந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்த முடியும். இந்த ஒப்பந்தம் மேலதிக அட்டைகளின் பாவனையுடனும் சம்பந்தப்பட்டதாக இருந்தால், அட்டை வைப்பாளர் அல்லது மேலதிக அட்டை வைப்பாளர்கள் வங்கிக்கு எழுத்துமூல அறிவித்தலை வழங்குவதுடன் மேலதிக அட்டைகளை மீளளிப்பதன் மூலம் இந்த ஒப்பந்தத்தை (மேலதிக அட்டைகளின் பாவனை தொடர்பில்) முடிவுறுத்தலாம். மீளளிக்கப்படும் அட்டைகள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட துண்டுகளாகக் கிழிக்கப்பட்டிருக்க வேண்டும்.

11.2 வங்கியானது, முன்னறிவித்தல் கொடுத்தோ கொடுக்காமலோ, காரணம் காட்டியோ காட்டாமலோ எந்த நேரத்திலும் அட்டையை இரத்துச் செய்வதன் அல்லது புதுப்பிக்க மறுப்பதன் மூலம் இந்த ஒப்பந்தத்தை முடிவுறுத்த முடியும். அத்தகைய முடிவுறுத்தல் நிகழும் வரை, வங்கியானது காலத்திற்குக் காலம் புதிய அட்டையை (புதுப்பிக்கப்பட்ட அட்டை) அட்டை வைப்பாளருக்கு வழங்கும்.

11.3 இந்த ஒப்பந்தம் முடிவுறுத்தப்படும் பட்சத்தில் அல்லது அட்டை வைப்பாளரின் வங்குரோத்துநிலை அல்லது மரணம் நிகழும் பட்சத்தில், அட்டைக் கணக்கில் நிலுவையாகவிருக்கும் மொத்தத் தொகையும், செயற்படுத்தப்பட்ட அட்டைக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் இன்னமும் அட்டைக் கணக்கில் பதிவு செய்யப்படாதிருக்கும்

ஏதேனும் தொகையும் உடனடியாகச் செலுத்தப்பட வேண்டும். அட்டைக் கணக்கிலுள்ள ஏதேனும் நிலுவைகளைத் தீர்ப்பதும் அத்தகைய நிலுவைகளை மீட்பது தொடர்பில் வங்கிக்கு ஏற்படும் அல்லது வங்கியினால் உறப்படும் ஏதேனும் இழப்புகள், அறவீடுகள், செலவுகள் (சட்டச் செலவுகளும் உட்படும்) அனைத்திற்கும் எதிராக வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்குவதும் அட்டை வைப்பாளரின் மற்றும் அவரது சொத்துக்களின் பொறுப்பாக இருக்கும். அத்தகைய மீளளிப்புக் கிடைக்கும் வரை, சரத்து 8இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி நடப்பு வீதத்தில் (வீதங்களில்) நிதி அறவீடுகளையும் ஏனைய கட்டணங்கள் மற்றும் விதிப்பனவுகளையும் தொடர்ந்து அறவிட வங்கி உரிமை கொண்டுள்ளது.

11.4 இந்த ஒப்பந்தத்தின் ஏதேனும் மீறுதலின் விளைவாகத் தனக்கு ஏற்பட்டதென வங்கி தீர்மானிக்கும் ஏதேனும் இழப்பு அல்லது செலவுக்கு அட்டை வைப்பாளர் மற்றும்/அல்லது மேலதிக அட்டை வைப்பாளர்கள் பொறுப்பாதல் வேண்டும்.

11.5 இந்த ஒப்பந்தம் வங்கியினால் முடிவுறுத்தப்பட்டாலும் அட்டை வைப்பாளரினால் முடிவுறுத்தப்பட்டாலும், அட்டைப் பாவனையின் பேரில் உறப்படும் ஏனைய சகல அறவீடுகளுக்கும் அட்டை வைப்பாளர் தொடர்ந்து பொறுப்பாளியாக இருப்பார்.

**12. அட்டை மற்றும் PIN இலக்கத்தின் தொலைவு**

PIN இலக்கம் மற்றும் அட்டையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் PIN இலக்கம் வேறெவருக்கும் தெரிந்துவிடுவதைத் தடுப்பதற்கும் அட்டை வைப்பாளர் இயலுமான சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

12.1 அட்டையின் மற்றும்/அல்லது PIN இலக்கத்தின் தொலைவு அல்லது திருட்டு நிகழ்ந்தவுடனேயே அது பற்றித் தொலைபேசி, மின்னஞ்சல், தொலைநகல் மற்றும் டெலெக்ஸ் மூலம் வங்கியின் அட்டை நிலையத்திற்கும் எழுத்தில் பொலிசாருக்கும் அறவிக்கப்பட வேண்டும் என்பதுடன், தொலைபேசி, மின்னஞ்சல், தொலைநகல் மற்றும் டெலெக்ஸ் மூலம் வங்கிக்கு அறிவிக்கப்பட்ட செய்தி எழுத்தில் ஊர்ஜிதம் செய்யப்படவும் வேண்டும். அட்டையின் மற்றும்/அல்லது PIN இலக்கத்தின் தொலைவு அல்லது திருட்டு முறைப்படி வங்கிக்கு அறிவிக்கப்பட்டு, பின்னர் எழுத்தில் ஊர்ஜிதம் செய்யப்படும் வரை, அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்பட்டுள்ள சகல தொகைகளுக்கும், அட்டையின் மற்றும்/அல்லது PIN இலக்கத்தின் அதிகாரமளிக்கப்படாத பாவனையின் விளைவாக இன்னமும் கணக்கில் பற்று வைக்கப்படாதிருக்கும் கொடுக்கல் வாங்கல்களுக்கும் அட்டை வைப்பாளர் பொறுப்பாளியாக வேண்டும். தொலைந்த அல்லது திருட்டுப்போன அட்டை(கள்) கண்டுபிடிக்கப்பட்டால், அட்டை வைப்பாளர் அதனை (அவற்றை) உடனடியாக வங்கிக்கு மீளளிக்க வேண்டும்.

12.2 அட்டை வைப்பாளர், அட்டையின் தொலைவு, திருட்டு அல்லது துஷ்பிரயோகம் சம்பந்தமாக அல்லது PIN இலக்கம் வேறொருவருக்குத் தெரிந்துவிட்டமை சம்பந்தமாக தன்னிடமுள்ள சகல தகவல்களையும் வங்கிக்கு வழங்க வேண்டும். அத்துடன், தவறிப்போன அட்டையை மீட்பதற்கு அவசியமென வங்கி கருதும் சகல நடவடிக்கைகளிலும் வங்கிக்கு உதவ வேண்டும்.

12.3 அட்டையொன்றின் தொலைவு அல்லது திருட்டைத் தொடர்ந்து அட்டை வைப்பாளருக்குப் பதிலீட்டு அட்டையொன்றை வழங்க வேண்டிய கடப்பாடு எதுவும் வங்கிக்குக் கிடையாது. வங்கியானது தனது தற்றுணிபிற்கேற்ப, அதே விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக அல்லது மாற்றப்பட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாக, அதே கணக்கு இலக்கத்தின் கீழ் அல்லது வேறு கணக்கு இலக்கத்தின் கீழ், பதிலீட்டு அட்டையொன்றை வழங்கக்கூடும். அவ்வாறான சந்தர்ப்பத்தில, வங்கியினால் தீர்மானிக்கப்படும் வீதத்தில் கையாளுகைக் கட்டணமொன்று விதிக்கப்பட்டு, அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

**13 பொது**

13.1 அட்டை வைப்பாளர் தனது தொழில் மற்றும்/அல்லது தனது அலுவலக அல்லது வசிப்பிட முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படின், உடனடியாக எழுத்து மூலம் வங்கிக்கு அறிவிப்பதுடன் அதற்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்கவும் வேண்டும்.

13.2 அட்டை வைப்பாளருக்குத் தபால் மூலம் வழங்கப்படும் ஏதேனும் அறிவித்தல் அல்லது கடிதம், அட்டை வைப்பாளரினால் வங்கிக்குக் கடைசியாக எழுத்தில் வழங்கப்பட்ட முகவரிக்கு அனுப்பப்படும் என்பதுடன், தபாலில் இடப்பட்ட 48 மணிநேரத்திற்குள் அவருக்குக் கிடைத்துவிட்டதாகவும் கருதப்படும்.

13.3 அட்டைக் கணக்கில் மீதியாகவுள்ள முழுத் தொகையையும் அல்லது அதனொரு பகுதியைத் தனது பூரண தற்றுணிபிற்கேற்ப ஏதேனும் வழியில் இடம்மாற்றுவதற்கு, இன்னொருவருக்கு ஒப்படைப்பதற்கு அல்லது விற்பதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது. நிலுவைத் தொகைகளை மீட்பதற்கு மூன்றாம் தரப்பு சேகரிப்பு முகவர்களை நியமிக்க அட்டை வைப்பாளர் இத்தால் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். நிலுவை மீட்பு விடயத்தை ஒரு சேகரிப்பு முகவரிடம் ஒப்படைக்க வேண்டிய அல்லது கொடுப்பனவை வற்புறுத்துவதற்குச் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால், அது தொடர்பிலான சகல செலவுகளையும் வட்டி, சட்டச் செலவுகள், சேகரிப்பு முகவரின் கட்டணங்கள் என்பவற்றோடு சேர்த்து அட்டை வைப்பாளர் செலுத்த வேண்டும்.

13.4 வங்கி கோரும் வேளைகளில், அட்டை வைப்பாளர் தனது நிதி நிலைமை தொடர்பான சகல தரவுகளையும் வங்கிக்கு வழங்க வேண்டும். அவ்வாறு வழங்கப்படும் தரவுகளை ஊர்ஜிதம் செய்ய அட்டை வைப்பாளர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். கோரப்படும்போது தரவுகள் வழங்கப்படாவிட்டால், வங்கியானது அதன் தற்றுணிபிற்கேற்ப அட்டையின் புதுப்பித்தலை மறுக்கக்கூடும் அல்லது அட்டையை உடனடியாக இரத்துச்செய்யக்கூடும். பொருத்தமெனக் கருதப்படும் பட்சத்தில், அத்தகைய இரத்துச்செய்கை மேற்கொள்ளப்பட்டதும், மொத்த நிலுவையையும் அட்டை வைப்பாளர் உடனடியாக வங்கிக்குச் செலுத்த வேண்டியிருக்கும்.

13.5 வங்கியினால் அனுப்பப்படும் தபால்கள் திரும்பி வருவதுடன் அட்டை வைப்பாளருடன் தொடர்புகொள்ளவும் முடியாதிருப்பின், விபரக்கூற்றுகள் மற்றும்/அல்லது கடிதங்களை விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இன்னுமொரு முகவரிக்கு அனுப்ப வங்கி உரிமை கொண்டுள்ளது.

13.6 கணக்கின் நடத்தை திருப்தியற்றதாக இருப்பின், ஏற்கனவே வழங்கப்பட்ட கடன் உச்சவரம்பைக் குறைக்க மற்றும்/அல்லது புதுப்பித்தலை நிறுத்த வங்கி உரிமை கொண்டுள்ளது. .

13.7 இந்த ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமைகள் மற்றும் நிவாரணங்கள் ஒட்டுமொத்தமானவை என்பதுடன், அவை (சட்டத்தினால் அல்லது வேறு வழியில் வழங்கப்பட்ட) வேறேதும் உரிமைகள் மற்றும் நிவாரணங்களிலிருந்து பிரத்தியேமானவை அல்ல.

13.8 ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் குறித்து அட்டை வைப்பாளர் சர்ச்சை எழுப்பினால், வங்கி அது பற்றி விசாரிக்கும். எனினும், அட்டை வைப்பாளர் சட்ட நடவடிக்கையைத் தொடர விரும்பாவிட்டால் அல்லது விசாரணைகளுக்கு உதவ வங்கிக்கு வருகைதராவிட்டால் அல்லது CCRV கமரா மற்றும் ஏனைய ஆதாரங்களை அவதானிக்க விரும்பாவிட்டால் அல்லது விசாரணை தொடர்பில் சம்பந்தப்பட்ட வணிக நிலையங்களுக்கு அல்லது ATMகளுக்கு செல்ல விரும்பாவிட்டால், அத்தகைய சர்ச்சைக்குரிய சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் அவர் பொறுப்பாளியாக்கப்படலாம்.

13.9 அட்டை வைப்பாளருக்கும் வங்கிக்கும் இடையிலான (டெலிபாங்கிங் ஊடான அல்லது வேறு வழியிலான) தொலைபேசி உரையாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்படுவதற்கும், அந்த ஒலிப்பதிவுகள் அட்டை வைப்பாளருக்கு எதிரான அல்லது வேறொரு நபருக்கு எதிரான ஏதேனும் வழங்குகளில் சான்றாகப் பயன்படுத்தப்படுதல் உட்பட, வங்கியினால் பொருத்தமெனக் கருதப்படும் ஏதாவது நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவதற்கும் அட்டை வைப்பாளர் இத்தால் சம்மதம் அளிக்கின்றார்.

13.10 வங்கியானது இந்த ஒப்பந்தத்தின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள ஏதேனும் உரிமையை அல்லது நிவாரணத்தை பிரயோக்கிக்கத் தவறினால் அல்லது தாமதித்தால், அது அந்த உரிமையின் அல்லது நிவாரணத்தின் தள்ளுபடியாக அமைய மாட்டாது. ஏதேனுமொரு உரிமை அல்லது நிவாரணம் தனியொரு தடவை அல்லது பகுதியளவில் மட்டும் பிரயோகிக்கப்பட்டிருப்பின், அந்த உரிமையின் அல்லது நிவாரணத்தின் வேறேதும் அல்லது தொடர்ச்சியான பிரயோகத்திற்கு அல்லது வேறேதும் உரிமை அல்லது நிவாரணத்தின் பிரயோகத்திற்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளதெனக் கொள்ள முடியாது.

13.11 இந்த ஒப்பந்தத்தின் ஏதேனும் விதிமுறை அல்லது ஏதேனும் ஒப்பந்த மீறல் தொடர்பாக வங்கி கொண்டுள்ள உரிமைகள் அல்லது நிவாரணங்கள் வங்கியினால் அட்டை வைப்பாளருக்குத் தள்ளுப்படி செய்யப்படுவதாக இருந்தால் அது பற்றி எழுத்தில் அறிவிக்கப்பட வேண்டும் என்பதுடன், வங்கியினால் பொருத்தமெனக் கருதப்படும் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் அவ்வாறு செய்யப்பட வேண்டும். இத் தள்ளுபடி அந்த

நேரத்திற்காக மற்றும் எந்த நோக்கத்திற்காக வழங்கப்பட்டதோ அந்த நேரத்திற்கும் நோக்கத்திற்கும் மட்டுமே ஏற்புடையதாக இருக்கும்.

13.12 அட்டை வைப்பாளர், ஏதேனும் அட்டைக் கொடுக்கல் வாங்கல், கடன் அட்டை மற்றும்/அல்லது அட்டை வைப்பாளரின் அட்டைக் கணக்கு என்பவை தொடர்பான சகல விடயங்களிலும் வங்கியின் பதிவேடுகளில் உள்ள தகவல்கள் (கணனியில் மற்றும் நுண்படச்சுருள்களில் உள்ள தகவல்களும் உட்படும்) முடிவான சான்றாக அமையும் என்பதுடன், வெளிப்படையான ஏதேனும் தவறு தவிர, எல்லா நோக்கங்களுக்காகவும் அட்டை வைப்பாளரைப் பிணிப்பவையாகவும் அமையும். ஏதேனும் தவறை அல்லது விடுபடுகையைத் திருத்திக்கொள்ளவும் வேறேதும் சான்றுகளை முன்வைக்கவும் வங்கிக்குள்ள உரிமைகள் இந்த விடயத்தில் கருத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். ஏதேனும் நோக்கத்திற்காக வங்கி தங்கியிருக்கும் கணனியிலுள்ள தகவல்களின் உண்மைத் தன்மை அல்லது சரிநுட்பம் குறித்து அட்டை வைப்பாளர் எந்த நேரத்திலும் கருத்து வேறுபாடு தெரிவிக்க முடியாது என்பதை அட்டை வைப்பாளர் இத்தால் ஏற்றுக்கொள்கின்றார். வங்கியானது, தனது பூரண தற்றுணிபிற்கேற்ப, ஏதேனும் அட்டைக் கொடுக்கல் வாங்கல் அல்லது அட்டை வைப்பாளரின் கடன் அட்டைக் கணக்குத் தொடர்பான ஏதேனும் ஆவணத்தை நுண்படச்சுருளில் அல்லது வங்கி பொருத்தமெனக் கருதும் வேறேதும் முறையில் பதிவுசெய்து வைக்கவும், அத்தகைய நுண்படச்சுருள் அல்லது பதிவு நாடாக்களை எந்த நேரத்திலும், வங்கி பொருத்தமெனக் கருதும் முறையில் அழித்துவிடவும் உரிமை கொண்டுள்ளது.

13.13 அட்டைக் கணக்குத் தொடர்பில் காலத்திற்குக் காலம் வங்கியினால் அட்டை வைப்பளருக்கு வழங்கப்படும் வசதிகள், அனுகூலங்கள் அல்லது சேவைகளின் பாவனையை ஆட்சி செய்யும் சகல விதிகள் மற்றும் நிபந்தனைகளினாலும் (:ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகள்”) பிணிக்கப்படுவதற்கு அட்டை வைப்பாளர் இணங்குகின்றார். இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் ஒரே மாதிரியாக இருக்கலாம் அல்லது காலத்திற்குக் காலம் திருத்தத்திற்கு அல்லது மாற்றத்திற்கு உள்ளாக்கப்படலாம். இந்த ஒப்பந்தத்திற்கும் கடன் அட்டை தொடர்பான ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும் இடையே ஏதேனும் முரண்பாடு காணப்படின், இந்த ஒப்பந்தமே மேலோங்கி நின்று ஆதிக்கம் செலுத்தும். இந்த ஒப்பந்தத்தின் ஏற்பாடுகளுக்குச் செயன்முனைப்பைக் கொடுப்பதற்கு அவசியமான அளவுக்கு மட்டும் வாசகங்கள் திருத்தப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படும். இந்த ஒப்பந்தத்தினால் வேறு விதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, இந்த ஒப்பந்தத்திலுள்ள எதுவும் ஏனைய விதிகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் எமது உரிமைகள் அல்லது நிவாரணங்களின் செல்லுபடியாகும் தன்மையை மற்றும் அமுலாக்கும் தன்மையைப் பாதிக்கமாட்டாது. அவை தொடர்ந்து பிரயோகிக்கப்படும்.

**14. தொலைபேசி, டெலெக்ஸ், தொலைநகல் மற்றும் மின்னஞ்சல் அறிவுறுத்தல்களுக்கான அதிகாரமளிப்பு மற்றும் இழப்பெதிர்காப்பு**

14.1 அட்டை வைப்பாளரினால் அல்லது அவரின் சார்பில் இன்னொருவரினால் காலத்திற்குக் காலம் தொலைபேசி, டெலெக்ஸ், தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் விடுக்கப்படும் அல்லது விடுக்கப்பட்டதாகக் கூறப்படும் ஏதேனும் அறிவித்தல், அறிவுறுத்தல், கோரிக்கை அல்லது வேறேதும் தொடர்பாடல் (“அறிவுறுத்தல்கள்”) சம்பந்தமாக, முன்சொல்லப்பட்டதன் பொதுத்தன்மைக்குப் பாரபட்சம் இல்லாத விதத்தில், அறிவுறுத்தல் வழங்கியவரின் அல்லது வழங்கியதாகக் கூறப்படுபவரின் அதிகாரத்தை அல்லது அடையாளத்தை விசாரிக்காமலும் அறிவுறுத்தல் கிடைத்த நேரத்தில் நிலவிய சூழ்நிலைகளைக் கருதாமலும், அத்தகைய அறிவுறுத்தல்களில் நம்பிக்கை வைத்து அவற்றைச் செயற்படுத்த அட்டை வைப்பாளர் வங்கிக்கு அதிகாரமளிக்கின்றார். அறிவுறுத்தல் கிடைக்கப்பெற்ற நாள்/நேரம் தொடர்பாக வங்கி வழங்கும் தீர்ப்பை அட்டை வைப்பாளர் இறுதி முடிவாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

14.2 அறிவுறுத்தல்கள் அட்டை வைப்பாளரினால் பூரணமாக அதிகாரமளிக்கப்பட்டவை எனவும் அவரைப் பிணிப்பவை எனவும் கருத வங்கிக்கு உரிமையுண்டு. வழங்கப்பட்ட அறிவுறுத்தல், பணக் செலுத்துதல் அல்லது ஏதேனும் கணக்கில் பற்று அல்லது வரவு வைத்தல் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும், ஏதேனும் பணத்தை அல்லது ஆவணத்தைக் கொடுத்துத் தீர்த்தல் சம்பந்தப்பட்டதாக இருந்தாலும், அட்டை வைப்பாளரை வங்கியுடனான அல்லது வேறொரு நபருடனான ஒப்பந்தத்திற்கு அல்லது ஏற்பாட்டுக்குப் பிணிக்க வழிகோலுவதாக இருந்தாலும் வேறேதும் வகையான கொடுக்கல் வாங்கல் அல்லது ஏற்பாட்டிற்கு அட்டை வைப்பாளரை உட்படுத்துவதாக இருந்தாலும், அந்த அறிவுறுத்தல் தொடர்பில் அல்லது அதில் நம்பிக்கை வைத்து, தனக்குப் பொருத்தமெனக் கருதும் நடவடிக்கைகளை எடுக்க வங்கி உரிமை கொண்டுள்ளது. சம்பந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் அல்லது

ஏற்பாட்டின் தன்மை, அல்லது பணத் தொகை இதன்போது கருத்திற்கொள்ளப்பட மாட்டா. அறிவுறுத்தல் விதிமுறைகளிலுள்ள ஏதேனும் தவறு, குழப்பம், தப்பெண்ணம், தெளிவின்மை என்பனவும் பொருட்படுத்தப்பட மாட்டா.

14.3 இந்த அதிகாரமளிப்பு மற்றும் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக வங்கி செயற்படுவதைக் கருத்திற்கொண்டு, இந்த அறிவுறுத்தல்களின் விளைவாக அல்லது அவை தொடர்பில் ஏதேனும் வகையில் வங்கியினால் உறப்படக்கூடிய அல்லது வங்கி எதிர்நோக்கக்கூடிய இழப்புகள், உரிமைக் கோரல்கள், சட்ட நடவடிக்கைகள், வழக்குகள், கோரிக்கைகள், சேதங்கள் மற்றும் செலவுகள் அனைத்திற்கும் எதிராக அட்டை வைப்பாளர் வாபஸ் பெற முடியாத இழப்பெதிர்காப்பை வழங்குகின்றார்.

14.4 முடிவுறுத்தலுக்கான அறிவித்தல் அட்டை வைப்பாளாரினால் வங்கிக்கு வழங்கப்பட்டு அதனைச் செயற்படுத்துவதற்காக வங்கிக்குப் போதிய நேரமும் வழங்கப்படும் வரை, இந்த அதிகாரமளிப்பின் விதிமுறைகளும் இழப்பெதிர்காப்பும் தொடர்ந்து நடைமுறையிலிருக்கும். அத்தகைய முடிவுறுத்தலானது, அதிகாரமளிப்பு மற்றும் இழப்பெதிர்காப்பு விதிமுறைகள் காலாவதியாவதற்கு முன்னர், அவற்றின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில், இந்த அதிகாரமளிப்பு மற்றும் இழப்பெதிர்காப்பு விதிமுறைகளின் கீழான எவ்வித பொறுப்பிலிருந்தும் அட்டை வைப்பாளரை விடுவிக்காது.

**15.தற்றுணிபு**

15.1 வங்கியின் ஏதேனும் உரிமைகள் மற்றும் நிவாரணங்களைப் பாதிக்காத விதத்தில், வங்கியானது தனது பூரண தற்றுணிபிற்கு அமைவாகவும், எவ்வித காரணமோ முன்னறிவித்தலோ வழங்காமலும், ஏதேனும் உத்தேச அட்டைக் கொடுக்கல் வாங்கலை அங்கீகரிப்பதற்கு மறுக்க முடியும். உத்தேச கொடுக்கல் வாங்கல் கணக்கில் பற்று வைக்கப்பட்டிருந்தால் அதன் நடப்பு மீதி கடன் உச்சவரம்பை மீறியிருக்காது என்றிருந்தாலும் வங்கி அவ்வாறு செய்யலாம்.

15.2 இந்த ஒப்பந்தத்தின் ஏனைய ஏற்பாடுகளைப் பாதிக்காமலும் பொருட்படுத்தாமலும், கடன் உச்சவரம்பை மீறிய நடப்பு மீதிக்கு வழிகோலக்கூடிய ஏதேனும் அட்டைக் கொடுக்கல் வாங்கலையும் வங்கி அனுமதிக்கலாம் அல்லது அங்கீகரிக்கலாம்.

15.3 இந்த ஒப்பந்தத்தின் ஏனைய ஏற்பாடுகளைப் பாதிக்காமலும் பொருட்படுத்தாமலும், வங்கியானது, தனது பூரண தற்றுணிபிற்கு அமைவாகவும், எவ்வித காரணமோ முன்னறிவித்தலோ வழங்காமலும், பின்வருவனவற்றைச் செய்ய உரிமை கொண்டுள்ளது.

15.3.1 அட்டையைப் பயன்படுத்த அட்டை வைப்பாளர் கொண்டுள்ள உரிமையை முற்றாக அல்லது குறிப்பிட்ட சில வசதிகள் தொடர்பாக மட்டும் இடைநிறுத்துதல். மற்றும்/அல்லது

15.3.2 கடன் உச்சவரம்பைக் குறைத்தல். மற்றும்/அல்லது

15.3.3 அட்டையை மீள வழங்க, புதுப்பிக்க அல்லது பதிலீடு செய்ய மறுத்தல். மற்றும்/அல்லது

15.3.4 விசேடமாக அட்டை வைப்பாளருக்கு மட்டும் அல்லது பொதுவாக எல்லா அட்டை வைப்பாளர்களுக்கும் அல்லது குறிப்பிட்ட சில அட்டை வைப்பாளர்களுக்குப் பொருந்தும் வகையில், அட்டைக் கணக்குத் தொடர்பில் வழங்கப்படும் ஏதேனும் அல்லது சகல அனுகூலங்கள், சேவைகள், வசதிகள் மற்றும் சலுகைகளை அறிமுகப்படுத்துதல், திருத்துதல், மாற்றுதல், மட்டுப்படுத்துதல், இடைநிறுத்துதல், முடிவுறுத்துதல் அல்லது வாபஸ் பெறுதல்.

15.4 அட்டை வைப்பாளர் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் அல்லது வங்கி பொருத்தமெனக் கருதும் பட்சத்தில், வங்கியானது எந்த நேரத்திலும், எவ்வித பொறுப்பையும் உறாமல், எவ்வித காரணமும் காட்டாமல், அட்டை வைப்பாளருக்கு அறிவித்தல் கொடுத்துவிட்டு, அட்டைக் கணக்கின் இலக்கத்தை மாற்றவும் புதிய அட்டை இலக்கத்திற்கென ஒரு புதிய அட்டைக் கணக்கை ஆரம்பிக்கவும் மற்றும்/அல்லது பதிலீட்டு அட்டையொன்றை வழங்கவும் நடப்பு மீதி மற்றும் சகல வரவுகளையும் (ஏதும் இருப்பின்) மூல அட்டைக் கணக்கிலிருந்து புதிய அட்டைக் கணக்கிற்கு மாற்றவும் கூடும். வங்கியானது இது தொடர்பான அறிவித்தலை வழங்கியதும் அட்டை வைப்பாளர் உடனடியாகத் தனது பழைய அட்டையை 4 துண்டுகளாகக் கிழித்து வங்கியிடம் மீளளிக்க வேண்டும்.

15.5 அட்டைக் கணக்கு மாற்றப்படுவதால் இந்த ஒப்பந்தத்தின் கீழ் அட்டை வைப்பாளருக்குள்ள கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளில் எவ்வித பாதிப்பும் ஏற்பட மாட்டாது. இந்த ஒப்பந்தமும் முன்னைய அட்டைக் கணக்குத் தொடர்பில் வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த சகல நேரடிப் பற்று அறிவுறுத்தல்களும் புதிய அட்டைக் கணககிற்குத்

தொடர்ந்து பிரயோகிக்கப்படும். அட்டை வைப்பாளர் வேறு விதமாக வங்கிக்கு எழுத்தில் அறிவித்தாலன்றி,, வங்கியானது தொடர்ந்தும் அத்தகைய பற்று வைப்புக்களைச் செய்யும்.

**16. விலக்களிப்புகள் மற்றும் தவிர்ப்புகள்**

16.1 ஏதேனும் வணிக நிறுவனம் அட்டையை மதிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு மறுத்தால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட முழுக் கடன் உச்சவரம்புத் தொகைக்கும் கடன் வசதியை வழங்க மறுத்தால், வங்கி அதற்குப் பொறுப்பேற்காது.

16.2 அட்டையை அல்லது அட்டை இலக்கத்தைப் பயன்படுத்திப் பெறப்பட்ட அல்லது கொள்வனவு செய்யப்பட்ட பண்டம் மற்றும்/அல்லது சேவையின் ஏதேனும் குறைபாட்டிற்கு அல்லது பற்றாக்குறைக்கு வங்கி பொறுப்பாளியாகாது. விற்பனைக்கான அல்லது நுகர்வுக்கான பண்டங்கள் மற்றும்/அல்லது சேவைகளை முன்வைக்கும் வகையில் ஏதேனும் விளம்பரங்களில், புத்தகங்களில், சஞ்சிகைகளில், காலாந்த ஏடுகளில், அஞ்சல் கட்டளைப் படிவங்களில், விபரக்கொத்துகளில் அல்லது வேறேதும் ஆவணங்களில் பிரசுரிக்கப்படும் அல்லது உள்ளடக்கப்படும் அறிக்கைகள், வாசகங்கள், படங்கள் அல்லது வேறேதும் பிரதிநிதித்துவங்களுக்கு வங்கி பொறுப்பேற்க மாட்டாது. வணிகருக்கு எதிரான முறைப்பாடு எதுவுமிருப்பின் அட்டை வைப்பாளர் அதனை வணிக நிறுவனத்துடனேயே தீர்த்துக்கொள்ள வேண்டும். வணிகருக்கு எதிராக அட்டை வைப்பாளர் கொண்டுள்ள ஏதேனும் உரிமைக் கோரல், இந்த ஒப்பந்தத்தின் கீழ் அட்டை வைப்பாளருக்குள்ள கடப்பாடுகளிலிருந்த அட்டை வைப்பாளரை விடுவிக்காது..

16.3 வங்கியின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட அல்லது அவ்வாறற்ற காரணத்தினால், ஏதேனும் SET அல்லது ATM இயந்திரத்தில் அல்லது தொடர்பாடல் அமைப்பில் அல்லது வசதிகளில் அல்லது தரவு செயற்படுத்தும் அமைப்பில் அல்லது அனுப்பீட்டு இணைப்பில் ஏற்படும் ஏதேனும் துண்டிப்பு அல்லது செயலிழப்பு அல்லது கோளாற்றின் விளைவாக, அல்லது ஏதேனும் கைத்தொழில் தகராறின் அல்லது வேறேதும் பிரச்சினையின் அல்லது வேறேதும் காரணத்தினால் ஏற்படக்கூடிய ஏதாவது தன்மையிலான ஏதேனும் அசௌகரியம், இழப்பு அல்லது சங்கடத்திற்கு அட்டை வைப்பாளர் எந்த விதத்திலும் வங்கியைப் பொறுப்பாக்க முடியாது.

16.4 ஏதேனும் இயந்திரத்தின் அல்லது தொடர்பாடல் அமைப்பின் செலிழப்பு, அட்டையின் குறைபாடு அல்லது சேதம், கைத்தொழில் தகராறு, யுத்தம், தெய்வ செயல் ஆகியவற்றின் அல்லது வங்கியின் அல்லது அதன் ஊழியர்களின் அல்லது முகவர்களின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட வேறேதும் காரணத்தின் நேரடியான அல்லது நேரடிற்ற விளைவாக, இந்த ஒப்பந்தத்தின் கீழான ஏதேனும் கடப்பாடுகளை நிறைவேற்ற வங்கிக்கு முடியாதுபோனால், அதற்காக வங்கி பொறுப்பாளியாக மாட்டாது.

16.5 வங்கியானது ஒவ்வொரு மாதத்திலும் ஒரு தினத்தை விபரக்கூற்றுத் திகதியாகவும் இன்னுமொரு தினத்தைக் கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டிய திகதியாகவும் தெரிவு செய்ய முடியும். அட்டை வைப்பாளருக்கு ஒரு விபரக்கூற்றை அனுப்ப வங்கிக்கு முடியாதுபோனாலும், நிதி அறவீடுகளின் கணிப்பு உட்பட அட்டை வைப்பாளரின் சகல பொறுப்புகளும் தொடர்ந்து நிலைத்திருக்கும்.

16.6 அட்டையில் பொறிக்கப்பட்டுள்ள புடைப்புருவின் அச்சுப்பதிவு அல்லது மீள்படைப்பை அல்லது மறைகுறியாக உள்ளடக்கப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டுள்ள ஏதேனும் விற்பனைச் சீட்டு, கொடுக்கல் வாங்கல் பதிவேடு, வரவு வவுச்சர், பணக் கையளிப்பு வரைவு மற்றும்/அல்லது வேறேதும் அறவீட்டுப் பதிவேறுகளுக்கு மதிப்பளிக்க வங்கி உரிமை கொண்டுள்ளது. இந்த நடைமுறையின்போது, அத்தகைய அறவீட்டுப் பதிவேடுகளின் உள்ளடக்கத்தை அல்லது அவற்றிலுள்ள கையொப்பங்களை ஊர்ஜிதம் செய்ய வேண்டிய கடப்பாடு வங்கிக்குக் கிடையாது.

16.7 சகல கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகவும் வங்கியிடமுள்ள பதிவேடுகள், விற்பனைச் சீட்டுகள் மற்றும் கணக்கு விபரக்கூற்றுகள், முடிவானவை மற்றும் எல்லா நோக்கங்களுக்காகவும் வங்கியைப் பிணிப்பவை என்பதை அட்டை வைப்பாளர் ஏற்றுக்கொள்கின்றார். வங்கியின் விபரக்கொத்துகள், விபரக்கூற்றுகள் அல்லது வெளியீடுகளில் விளம்பரதாரர்களினால் விளம்பரப்படுத்தப்படும் சேவைகள், பண்டங்கள் அல்லது அனுகூலங்களின் தவறுகையினால் அல்லது அவற்றின் விளைவாக ஏதேனும் வகையில் ஏதேனும் தன்மையிலான உரிமைக் கோரல்கள் சமர்ப்பிக்கப்படுமாயின் வங்கி அதற்கு எவ்விதத்திலும் பொறுப்பாளியாகாது.

16.9 இந்த ஒப்பந்தத்தினால் ஆட்சி செய்யப்படும் அல்லது இந்த ஒப்பந்தத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள ஏதேனும் விடயங்கள் அல்லது கொடுக்கல் வாங்கல்களைச் செயற்படுத்துவதற்கு, வங்கி தனது பூரண தற்றுணிபிற்கேற்ப,

தனக்குப் பொருத்தமெனக் கருதும் முறையில் எவரேனும் முகவர்களை, ஒப்பந்தகாரர்களை அல்லது பிரதிநிதிகளைப் பயன்படுத்த உரிமை கொண்டுள்ளது என்பதை அட்டை வைப்பாளர் ஏற்றுக்கொள்கின்றார். அத்தகைய முகவர்களின், ஒப்பந்தகாரரின் மற்றும்/அல்லது பிரதிநிதிகளின் ஏதேனும் செயல், செயலின்மை, கவனயீனம் அல்லது வேண்டுமென்றே இழைக்கப்பட்ட தவறுகைக்கு வங்கி பொறுப்பேற்க மாட்டாது.

**17. இழப்பெதிர்காப்பு**

17.1 முன்சொல்லப்பட்டவற்றின் பொதுத்தன்மைக்கு முரணாகாத விதத்தில், பின்வருவன உள்ளிட்ட நிகழ்வுகளினால் அட்டை வைப்பாளரின் அட்டைக் கணக்கு மற்றும்/அல்லது இந்த ஒப்பந்தம் தொடர்பில் அல்லது அவற்றின் விளைவாக வங்கிக்கு ஏற்படக்கூடிய அல்லது வங்கியினால் உறப்படக்கூடிய ஏதேனும் இழப்பு, சேதம், பொறுப்பு, கிரயம் மற்றும் செலவுக்கு (பூரண இழப்பெதிர்காப்பு அடிப்படையில் சட்டச் செலவுகளும் உட்படும்) எதிராக வங்கிக்குப் பூரண இழப்பெதிர்காப்பை வழங்கவும் வங்கியைத் தீங்கிலிருந்து விலக்கி வைக்கவும் அட்டை வைப்பாளர் இணங்குகின்றார்:

17.1.1 இந்த ஒப்பந்தத்தின் கீழ் அட்டை வைப்பாளருக்கு உள்ள ஏதேனும் கடப்பாடுகள் மீறப்படுதல்.

17.1.2 வங்கியின் ஏதேனும் உரிமைகள் மற்றும் நிவாரணங்கள் அட்டை வைப்பாளருக்கு எதிராக அமுலாக்கப்படுதல் அல்லது அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படுதல்.

17.1.3 அட்டை வைப்பாளரின் அட்டைக் கணக்கில் பற்று வைக்கப்படக்கூடிய மற்றும்/அல்லது கோரிக்கையின் பேரில் அட்டை வைப்பாளரினால் செலுத்தப்பட வேண்டிய வகையில், ஏதேனும் சட்டத்தில், பிரமாணத்தில் அல்லது உத்தியோகபூர்வ பணிப்பில் ஏதேனும் மாற்றம் செய்யப்படுதல்.

17.1.4 இலத்திரனியல் முறையில் அனுப்பப்படும்போது ஏதேனும் தரவு இழக்கப்படுதல் மற்றும்/அல்லது தவறான இடத்திற்குச் சென்றுவிடுதல்.

**18. சட்ட நடவடிக்கை**

ஏதேனும் காரணத்தினால், அட்டை வைப்பாளர் இந்த ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகத் தவறினால், வங்கியானது இந்த அட்டை வைப்பாளர் ஒப்பந்தத்தை முடிவுறுத்திவிட்டு, சட்ட நடவடிக்கை எடுப்பதன் மூலம் அல்லது வங்கியினால் தீர்மானிக்கப்படும் வேறேதும் சர்ச்சைத் தீர்ப்பு நடைமுறையின் மூலம், ஒப்பந்தத்தின் கீழ் நிலுவையாகவுள்ள சகல தொகைகளையும் மீட்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். இது தொடர்பில் வங்கியினால் உறப்படும் சட்டச் செலவுகள் உட்பட சகல கிரயங்கள், அறவீடுகள் மற்றும் செலவுகள் அனைத்திற்கும் பூரண இழப்பெதிர்காப்பு அடிப்படையில் அட்டை வைப்பாளர் பொறுப்பாளியாவார்.

**19. பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்கள்**

19.1 அட்டை வைப்பாளர் தனது அட்டை எல்லா வேளைகளிலும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டு நாணயச் சட்டத்தின் ஏற்பாடுகள், காலத்திற்குக் காலம் வெளியிடப்படும் வேறேதும் வர்த்தமானி அறிவித்தல்கள் என்பவற்றிற்கும் அவற்றின் விடுக்கப்படும் செயற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கும் அமைவாகவே பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

19.2 பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டாளரின் அல்லது காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படும் வேறேதும் ஒழுற்குபடுத்தல் அதிகாரிகளின் அறிக்கையிடல் தேவைப்படுத்தல்களுக்கு வங்கி இணங்கியொழுகும்.

19.3 நடைமுறையிலுள்ள பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுப் பிரமாணங்கள் மீறப்பட்டுள்ளன என்று நம்புவதற்கு வங்கியிடம் ஏதேனும் காரணம் இருக்குமாயின், வங்கியானது, தனது சொந்த முடிவிற்கேற்ப, அட்டை வைப்பாளருக்கு அறிவித்தல் கொடுக்காமலே, தனது சொந்த முடிவிற்கேற்ப, அட்டையை இரத்துச் செய்துவிட முடியும்.

19.4 அட்டை வைப்பாளர் தனது அட்டையை பயணம், தங்குமிட வசதி, மருத்துவச் சேவை, வாழ்க்கைச் செலவு, போன்ற தனிப்பட்ட பயன்பாடுகளுக்கும் வெளிநாட்டு அமைப்பொன்றிற்கு அல்லது கல்வி நிலையத்திற்குத் தனிப்பட்ட தன்மையிலான பதிவுக் கட்டணங்கள், பரீட்சைக் கட்டணங்கள் மற்றும் சந்தாக் கட்டணங்களைச் செலுத்துவதற்கும் தனிப்பட்ட தேவைக்காக வெளிநாட்டில் வாங்கும் பொருள்களுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கும் தனிப்பட்ட முறையிலான பயணக் காப்புறுதி மற்றும் உடல்நலக் காப்புறுதி தொடர்பான

கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்கும் மற்றும்/அல்லது பயணச் செலவுகள், ஹொட்டேல் கட்டணங்கள், எதேச்சையான செலவுகள் மருத்துவச் செலவுகள், தனிப்பட்ட பாவனைக்கான பொருள்களின் கொள்வனவு போன்றவை தொடர்பில் மின்னஞ்சல், இணையத்தளம் மற்றும் தொலைபேசி ஊடாகச் செயற்படுத்தப்படும் கொடுக்கல் வாங்கல்களுக்கு வெளிநாட்டு நாணயத்தில் அறவிடப்படும் கட்டணங்களைச் செலுத்துவதற்கும் மாத்திரமே பயன்படுத்த வேண்டும். மூலதனக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் வர்த்தக ரீதியில் பெருமளவு பொருள்களை இறக்குமதி செய்வதற்கும் அட்டை பயன்படுத்தப்படக் கூடாது. தனிப்பட்ட பாவனைக்காக இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான கொடுப்பனவானது, பெறுமதிக் காப்புறுதிக் கப்பற் சரக்கு (C.L.F.) அடிப்படையில் ஒழுங்குபடுத்துநரினால் நிர்ணயிக்கப்படும் உச்சவரம்பிற்கு உட்பட்டதாக வரையறை செய்யப்படும். ''தனிப்பட்ட பாவனை'' என்பது அட்டை வைத்திருப்பவரின், அவரது வாழ்க்கைத் துணைவரின், அவரது பிள்ளைகளின் மற்றும் அவரது பெற்றோரின் பாவனையைக் குறிக்கும். ஏதேனும் வர்த்தக நோக்கத்திற்கான பாவனையை அது உள்ளடக்காது.

19.5 இலங்கை ரூபாய் வெளிநாட்டு நாணயமொன்றிற்கு மாற்றப்படுவதைத் தேவைப்படுத்தும் முன்சொல்லப்பட்ட வகையிலான கொடுக்கல் வாங்கல் எதனையும் மேற்கொள்வதற்கு அட்டை வைப்பாளரின் அட்டையைப் பயன்படுத்த வேறெந்தத் தரப்பிற்கும் அட்டை வைப்பாளர் அனுமதியளிக்கக் கூடாது.

19.6 அட்டை வைப்பாளர் குடிபெயர்ந்தால் அல்லது தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றால் அல்லது தற்சமயம் நடைமுறையிலுள்ள மற்றும் காலத்திற்குக் காலம் திருத்தப்படும் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைச் சட்டத்தின் வரைவிலக்கணப்படி ""வதிவிடமற்றவர்'' என்று கருதப்பட்டால், அவர் தனது அட்டையை(அடடைகளை) வங்கியிடம் மீள ஒப்படைக்க வேண்டும்.

19.7 இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைப் பணிப்பாளரினால் மற்றும் காலத்திற்குக் காலம் குறித்துரைக்கப்படும் வேறேதும் ஒழுங்குபடுத்தல் அதிகாரிகளினால் முன்வைக்கப்படும் அறிக்கையிடல் தேவைப்படுத்தல்களுக்கு வங்கி இணங்கியொழுகும்.

19.8 முடிவுறுத்தல் தொடர்பாக அல்லது வேறேதும் தொடர்பாக, இந்த ஒப்பந்தத்திலுள்ள ஏதேனும் ஏற்பாடுகள் எவ்வாறிருந்தாலும், அப்போது நடைமுறையிலிருந்த வெளிநாட்டு நாணயப் பரிவர்த்தனைச் சட்டத்தின் ஏற்பாடுகள்/ தேவைப்படுத்தல்கள் மீறப்பட்டுள்ளன என்று நம்புவதற்கு ஏதேனும் காரணம் இருக்கும் பட்சத்தில், வங்கியானது அதன் சொந்த முடிவிற்கேற்ப, அட்டை வைப்பாளருக்கு அறிவிக்காமலே ஒப்பந்தத்தை உடனடியாக முடிவுறுத்த மற்றும்/அல்லது அட்டையை(அட்டைகளை) புதுப்பிப்பதற்கு மறுக்க உரிமை கொண்டுள்ளது.

**20. விதிமுறைகளின் மாறுபாடுகள்**

20.1 காலத்திற்குக் காலம் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை மாற்ற அல்லது விதிகள் மற்றும் நிபந்தனைகளைப் புதிதாகச் சேர்க்க வங்கி உரிமை கொண்டுள்ளது (வரையறைக்கு உட்படாத வகையில், இதன்கண் விதிக்கப்பட்டுள்ள கட்டணங்கள் மற்றும் அறவீடுகள் அல்லது அறிமுகப்படுத்தப்படும் புதிய கட்டணங்கள் அல்லது அறவீடுகளும் இவற்றில் உட்படும்).

20.2 ஏதேனும் மாற்றம் நடைமுறைக்கு வந்த பின்பும் அட்டை வைப்பாளர் தனது அட்டையைத் தொடர்ந்து பயன்படுத்தினால் அவர் அந்த மாற்றத்தை மறுப்பிற்கிடமின்றி ஏற்றுக்கொண்டார் என்று கருதப்படும். அட்டை வைப்பாளர் அத்தகைய மாற்றத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், குறிப்பிட்ட மாற்றம் செயலுக்கு வருவதற்கு முன்பதாகவே அட்டைகளை இரத்துச் செய்துவிடும் நோக்கத்திற்காக, அட்டை வைப்பாளர் தனது அட்டையையும் அதனுடன் இணைந்த ஏதேனும் மேலதிக அட்டைகளையும் வங்கிக்குத் திருப்பிக்கொடுக்க வேண்டும்.

20.3 (இந்த ஒப்பந்தம் ஏதேனும் வகையில் முடிவுறுத்தப்பட்டிருந்தாலும்) அட்டையின் பேரிலும் ஏதேனும் மேலதிக அட்டைகளின் பேரிலும் செய்யப்பட்டிருந்த அட்டைக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அட்டை வைப்பாளர் வங்கிக்கு இழப்பெதிர்காப்பு வழங்க வேண்டும்.

**21. தகவல்களின் வெளிப்படுத்துதல்**

வங்கியானது தனது நலன்களுக்கு அவசியமெனக் கருதும் வேளைகளில், வாடிக்கையாளருக்கு எவ்வித பொறுப்பும் இல்லாமல், அட்டைக் கணக்கின் முடிவுறுத்தலுக்கு முன்போ அல்லது பின்போ எந்த நேரத்திலும், அட்டை வைப்பாளர் அல்லது அவரின் ஏதேனும் அட்டைக் கொடுக்கல் வாங்கல் அல்லது அவரது அட்டைக்

கணக்கு அல்லது அவரால் வங்கியில் பேணப்படும் வேறேதும் கணக்கு தொடர்பான தகவல்களை, தனது பூரண தற்றுணிபிற்கேற்பப் பொருத்தமெனக் கருதும் ஏதேனும் மூன்றாம் தரப்பிற்கு வழங்க முடியும். முன்சொல்லப்பட்டதன் பொதுத்தன்மையைப் பாதிக்காத விதத்தில், அத்தகை மூன்றாம் தரப்புக்களில் நாடெங்குமுள்ள எமது வங்கியின் கிளைகள், எமது ஊழியர்கள், முகவர்கள், பிரதிநிதிகள், மற்றும்/அல்லது சுயாதீன ஒப்பந்தகாரர்கள், அட்டைக் கணக்கைச் செயற்படுத்துவதற்கு அட்டை வைப்பாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் நபர், அட்டைக் கணக்கு மற்றும்/அல்லது இந்த ஒப்பந்தம் தொடர்பான வசதியளிப்பு, அமுலாக்கம் மற்றும் செயற்படுத்துதலில் ஈடுபட்டுள்ள அல்லது ஏதேனும் வதிகளை அல்லது சேவைகளை வழங்கும் எவரேனும் நபர், ஏதேனும் வணிக நிறுவனம், வங்கி அல்லது நிதி நிறுவனம், இலங்கையில் அல்லது வேறோர் இடத்திலுள்ள ஏதேனும் அரச நிறுவனம், சட்டபூர்வ சபை அல்லது அதிகார அமைப்பு மற்றும் அத்தகைய வெளிப்படுத்துதல் தனது நலன்களுக்கு அவசியமென வங்கி கருதும் வேறேதும் நபர் உள்ளடங்கலாம். அத்தகைய வெளிப்படுத்தலுக்கு அட்டை வைப்பாளர் இத்தால் சம்மதம் தெரிவிக்கிறார்.

**22. எதிரீட்டு உரிமை பிணையாக வைக்கப்படும் நிதி**

22.1 ஏதேனும் பொதுவான எதிரீட்டு உரிமைக்கு அல்லது சட்டத்தினால் அல்லது வேறேதும் ஒப்பந்தத்தினால் வழங்கப்பட்ட ஏனைய உரிமைகளுக்கு மேலதிகமாக,

22.1.1 வங்கியானது, காலத்திற்குக் காலம் எந்த நேரத்திலும், அட்டை வைப்பாளருக்கு எவ்வித பொறுப்பும் இல்லாமலும் முன்னறிவித்தல் இல்லாமலும், அட்டை வைப்பாளர் வங்கியில் வைத்திருக்கும் ஏதேனும் அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட கணக்குகளை ஒன்றேசேர்த்து அல்லது ஒருங்கிணைத்து, அவற்றில் வரவாகவுள்ள பணத்தை, இந்த ஒப்பந்தத்தின் கீழ் அட்டை வைப்பாளரின் வங்கிக்கான பொறுப்புக்களை ஈடுசெய்யும் நோக்கத்திற்காக, எதிரீடு செய்ய, பிடித்துவைக்க, தடைசெய்ய, மாற்ற அல்லது பிரயோகிக்க முடியும். அட்டை வைப்பாளர் இத்தால் இதற்கான சம்மதத்தை வழங்குகின்றார்.

22.1.2 அத்தகைய ஒன்றுசேர்ப்பு, ஒருங்கிணைப்பு மற்றும்/அல்லது எதிரீடு, ஒரு நாணயம் வேறு நாணயத்திற்கு மாற்றப்படுவதைத் தேவைப்படுத்துமாயின், வங்கியானது அத்தகைய மாற்றத்தைச் சரியான நேரத்திலும் வங்கியின் வழமையான நடைமுறைக்கு அமைவான பரிவர்த்தனை வீதத்திலும் செய்வதற்கு உரிமை கொண்டுள்ளது. இதனால் எழக்கூடிய ஏதேனும் பரிவர்த்தனை இடர்கள், இழப்புகள், தரகுப்பணம் மற்றும் வேறேதும் வங்கி அறவீடுகளுக்கு அட்டை வைப்பாளர் பொறுப்பாதல் வேண்டும்.

22.2 கடன் அட்டை வழங்கப்படும்போது, DFCC வங்கி பி.எல்.சி.யிலுள்ள கணக்கொன்றில் பணத்தைப் பிணையாக வைக்கும்படி வங்கி அட்டை வைப்பாளரைக் கேட்கக்கூடும். அட்டை வைப்பாளருக்கு அறிவித்தல் கொடுத்தோ கொடுக்காமலோ இப் பிணைப் பணத்தை, அட்டைக் கணக்கு நிலுவைக்கு எதிராக ஈடுசெய்வதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது. பிணையாக வைக்கப்பட்ட பணத்தை ஏதேனும் நேரத்தில் மீளப் பெற்றுக்கொள்ள அட்டை வைப்பாளர் விரும்பினால், அவர் அது பற்றி முன்கூட்டியே வங்கிக்கு அறிவிக்க வேண்டும். வங்கியானது, அட்டை வைப்பாளரின் கடன் நடத்தையைப் பொறுத்து, அது தொடர்பில் தீர்மானத்தை எடுக்கும்.

**23. இந்த ஒப்பந்தத்தின் செயல்வலு**

23.1 இந்த ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டாலும், ஏதேனும் அட்டைக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலும் அட்டை வைப்பாளர்கள் மற்றும் மேலதிக அட்டை வைப்பாளர்கள் இதன் கீழ் உறப்பட்ட பொறுப்புகள் தொடர்பிலும், ஒப்பந்தத்தின் சகல ஏற்பாடுகளும் அட்டை வைப்பாளர்கள் மற்றும் மேலதிக அட்டை வைப்பாளர்களைப் பொறுத்தவரையில் தொடர்ந்தும் பூரண செயல்வலுவுள்ளதாக இருக்கும்.

23.2 இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் ஒவ்வொன்றும் வெவ்வேறானதும் தனித்தனியே செயற்படுபவதும் ஆகும். விதிகள் மற்றும் நிபந்தனைகளில ஏதேனுமொன்றோ அல்லது சிலவோ ஏதேனும் வேளையில் செல்லலுபடி அற்றவையாக, சட்ட விரோதமானவையாக அல்லது அமுலாக்க முடியாதவையாகக் காணப்பட்டாலும், எஞ்சியுள்ள ஏற்பாடுகளின் செல்லுபடியாகும் தன்மை, சட்டவலு அல்லது அமுலாக்கும் தன்மை அதனால் எந்த விதத்தலும் பாதிக்கப்பட மாட்டாது.

வங்கியானது அதன் தனித் தற்றுணிபிற்கேற்ப இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளைத் திருத்த அல்லது மறுசீரமைக்க உரிமை கொண்டுள்ளது.

**24. ரொக்க முற்பணம்**

24.1 ATM இயந்திரங்கள் அல்லது வங்கியின் கிளைகள் அல்லது பணம் வழங்கும் வணிகர்கள் அல்லது முகவர்களிடம் இருந்து அட்டை வைப்பாளர்களினால் பெறப்படும் ரொக்க முற்பணத் தொகைகள், அந்தந்த ATM, வங்கி மற்றும் வணிகரின் பிரதேச அல்லது நாட்டு வரம்பெல்லைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்படும். மத்திய வங்கி மற்றும் நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் பிரமாணங்களும் பிரயோகிக்கப்படும்.

24.2 வங்கியினால் தீர்மானிக்கப்படும் உச்சவரம்பிற்கு உட்பட்டதாகவே அட்டை வைப்பாளர் ரொக்க முற்பணத்தைப் பெற முடியும். இந்த உச்சவரம்பு அட்டை வைப்பாளருக்கு முன்கூட்டியே அறிவிக்கப்படலாம் அல்லது அறிவிக்கப்படாமலும் இருக்கலாம்.

24.3 வங்கியானது, அட்டை வைப்பாளருக்கு அறிவிக்காமலே இந்த வசதியை மாற்ற அல்லது வாபஸ் பெற முடியும்.

**25. சட்டம் மற்றும் நியாயாதிக்கம்**

இந்த ஒப்பந்தம் இலங்கையின் சட்டங்களினால் ஆட்சி செய்யப்படுவதுடன், அவற்றிற்கு அமைவானதாகவும் கொள்ளப்படும். சட்டம், அரசாங்கப் பிரமாணங்கள் அல்லது இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்கள் ஏதேனும் திருத்தங்களைத் தேவைப்படுத்துமாயின், அதற்கேற்றவாறு இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் தன்னியல்பாகவே திருத்தம் பெறும்.

**26. அட்டையின் நோக்கம் மற்றும் பாவனை**

அட்டையையும் அட்டைக் கணக்கையும் செல்லுபடியான மற்றும் சட்டபூர்வமான நோக்கங்களுக்கு மாத்திரமே பயன்படுத்த முடியும். அட்டை வைப்பாளர் இந்த அட்டையை அல்லது அட்டைக் கணக்கை வேறேதும் நோக்கத்திற்காகப் பயன்படுத்தினால் அல்லது இன்னுமொருவர் பயன்படுத்த இடமளித்தால், அத்தகைய பாவனைக்கு அட்டை வைப்பாளர் பொறுப்பாளியாவார். அத்தகைய பாவனையின் விளைவாக வங்கியினாலும் கடன் அட்டைச் செயற்பாடுகள் தொடர்பில் வங்கி ஒப்பந்தம் செய்திருக்கும் வீசா இன்டர்நஷனல் அல்லது வேறேதும் நிறுவனத்தினாலும் செலுத்தப்பட்ட தொகைகள் மற்றும் உறப்பட்ட செலவுகள் அனைத்தையும் வங்கிக்கும் வீசா இன்டர்நஷனலுக்கும் சம்பந்தப்பட்ட மற்றைய நிறுவனத்திற்கும் செலுத்தும்படி அட்டை வைப்பாளர் கேட்கப்படலாம்.

**27. காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தின் தவிர்ப்பு**

அட்டை வைப்பாளரினால்/வைப்பாளர்களினால் அல்லது எம்மில் ஒருவரினால் இன்னமும் வங்கிச் செலுத்தப்படாத ஏதேனும் பணத் தொகைகள் அல்லது அவற்றினொரு பகுதி அட்டைக் கணக்கில் நிலுவையாகவும் வங்கிக்கு செலுத்தப்பட வேண்டியதாகவும் இருக்குமானால், அத் தொகையைச் செலுத்துவதற்கு அட்டை வைப்பாளர்/கள் கொண்டுள்ள பொறுப்பானது தொடர்ந்து நிலைத்திருக்கும். முன்சொல்லப்பட்டவாறு வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் அல்லது அவற்றினொரு பகுதி மீட்கப்படக்கூடியவை. அத்துடன், இங்கு அல்லது ஏதேனும் சட்டவிதியில் அல்லது பங்குரிமை அல்லது ஆட்சியுரிமைக் கட்டளைச் சட்டத்தில் வேறேதும் சட்டத்தில் அல்லது அரசாங்கப் பிரமாணத்தில் வேறு விதமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், இந்தப் பொறுப்பு அட்டை வைப்பாளரை அல்லது அட்டை வைப்பாளர்களையும் எம்மில் ஒவ்வொருவரையும் கூட்டாகவும் தனித்தனியாகவும் வெவ்வேறாகவும் சாரும் என்பதை அட்டை வைப்பாளர்/கள் ஏற்றுக்கொள்கின்றனர். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பணத் தொகைகளை அல்லது அவற்றினொரு பகுதியை மீட்பதற்காக அட்டை வைப்பாளருக்கு/வைப்பாளர்களுக்கு அல்லது எவரேனுமொரு அட்டை வைப்பாளருக்கு எதிராக வழக்குத் தொடுக்க வங்கிக்குள்ள உரிமையைத் தடுக்கும் வகையில் காலவிதிப்புக் கட்டளைச் சட்டத்தை அல்லது அதன் ஏற்பாடுகனை அல்லது ஏதேனும் சட்டவிதியை அல்லது வேறேதும் சட்டத்தை அட்டை வைப்பாளர்/கள் அல்லது அட்டை வைப்பாளர்களில் எவரும் முன்வைக்க முடியாது என்பதை அட்டை வைப்பாளர்/கள் ஏற்றுக்கொள்கின்றனர்.

**28. 1% கேஷ் பெக் கடன் அட்டை வழங்கலுக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

28.1 அட்டை வைப்பாளரினால் வங்கியில் பேணப்படும் சேமிப்புக் கணக்கொன்றின் தொடர்பில் வங்கியினால் தீர்மானிக்கப்படும் பணச் சேமிப்பைப் பெற்றுக்கொள்ள **DFCC கேஷ் பெக் கடன் அட்டை வழங்கல்** இடமளிக்கின்றது. அட்டை வைப்பாளர் இதற்கென வங்கிக்கு விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும். DFCC கேஷ் பெக் கடன் அட்டைக்கான விசேட விதிகள் மற்றும் நிபந்தனைகளை அட்டை வைப்பாளர் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், வங்கியானது தனது தற்றுணிபிற்கேற்ப இந்த வசதியை வழங்கும்.

28.2 செயற்படும் DFCC சேமிப்பு கணக்கொன்றையும் நிறுவனக் கடன் அட்டை தவிர்ந்த DFCC வீசா பிறைமரி கடன் அட்டை ஒன்றையும் வைத்திருக்கும் அட்டை வைப்பாளர்கள் அனைவரும் கேஷ் பெக் திட்டத்திற்குத் தகுதி பெறுவார்கள். இத் திட்டத்தின் கீழ், DFCC கடன் அட்டை செயற்படுத்தப்பட்ட பின், ஒரு மாதாந்த விபரக்கூற்றுக் காலப்பகுதியில் குறைந்தபட்சம் ரூ.5,000க்கான திரட்டிய தொகையைச் செலவிடும் அட்டை வைப்பாளர், செலவுத் தொகையில் ஒரு சதவீதத்தை வணிகரிடமிருந்து திரும்பப் பெற்றுக்கொள்வார்.

28.3 கேஷ் பெக் கடன் அட்டையைப் பெறுவதற்கு பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தகுதி பெற மாட்டா: மேலே சரத்து 7இல் குறிப்பிடப்பட்டுள்ள மீளவரும்/தவணை கொடுப்பனவுகள், கணக்கு மீதிக்கு மேலான பணப் பரிமாற்றங்கள், வங்கிக் கட்டணங்கள் மற்றும் அறவீடுகள், உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் அல்லது ஒன்லைனில் மேற்கொள்ளப்படும் சூதாட்டங்கள்.

28.4 வங்கிக்கு எழுத்தில் வழங்கப்படும் அறிவுறுத்தலின் மூலம், அட்டை வைப்பாளர் தனது சொந்த DFCC சேமிப்புக் கணக்கை அல்லது DFCC சிறுவர் சேமிப்புக் கணக்கொன்றை இத் திட்டத்திற்காக நியமிக்கலாம்.

28.5 கேஷ் பெக் மீளளிப்பைப் பெற்றுக்கொள்வது மாதாந்தமா, காலாண்டுதோறுமா அல்லது வருடாந்தமா என்பதை அட்டை வைப்பாளரே தெரிவு செய்யலாம்.

28.6 தகுதியுள்ள மேலதிக அட்டை வைப்பாளரினால் சம்பாதிக்கப்படும் கேஷ் பெக்/தள்ளுபடி தொகையானது பிரதான அட்டை வைப்பாளரின் கணக்கில் வரவு வைக்கப்படும்.

28.7 சம்பாதிக்கப்பட்ட கேஷ் பெக் குறைந்தபட்சம் ரூ.100 ஆக இருக்குமானால், அட்டை வைப்பாளரினால் ஒரு கலண்டர் மாதத்தில் சம்பாதிக்கப்பட்ட கேஷ் பெக்/தள்ளுபடி தொகை அடுத்த/தொடர்ந்து வரும் கலண்டர் மாதத்தில் நியமிக்கப்பட்ட DFCC சேமிப்புக் கணக்கில் வரவு வைக்கப்படும். கேஷ் பெக் விபரங்களை ஊர்ஜிதம் செய்யும் SMS அறிவித்தலொன்று அட்டை வைப்பாளருக்கு அனுப்பப்படும். சம்பாதிக்கப்பட்ட கேஷ் பெக் விபரங்கள், அட்டை வைப்பாளருக்கான அடுத்த கடன் அட்டை விபரக்கூற்றில் காட்டப்படும்.

28.8 மேலே சரத்து 28.7இல் குறிப்பிட்டுள்ளபடி கேஷ் பெக்/தள்ளுபடி தொகை வரவு வைக்கப்படும் நேரத்தில், தகுதியுள்ள அட்டை வைப்பாளரின் கடன் அட்டைக் கணக்கு, DFCC வங்கி அதன் தனித் தற்றுணிபிற்கேற்ப எடுக்கும் முடிவின் பிரகாரம், நல்ல நிலையில் உள்ளதாகவும் நேர்த்தியான மற்றும் திருப்திகரமான முறையில் பேணப்படுவதாகவும் இருக்க வேண்டும். அட்டைக் கணக்கு தவறிழைத்த ஒரு கணக்காக இருந்தால் அல்லது கேஷ் பெக்/தள்ளுபடி தொகை வரவு வைக்கப்படுவதற்கு முன்னர் அக் கணக்கு தன்னிச்சையாக அல்லது அவ்வாறற்ற முறையில் மூடப்பட்டால், முடிவுறுத்தப்பட்டால் அல்லது இடைநிறுத்தப்பட்டால், கேஷ் பெக்/தள்ளுபடி தொகையைக் கணக்கில் வரவு வைக்காமல் விடுவதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது.

28.9 வரவு வைக்கப்படவிருக்கும் கேஷ் பெக் தொகை, இரண்டு தசம ஸ்தானங்கள் வரை கொண்ட இலக்கமாகச் சுருக்கப்படும்.

28.10 சர்ச்சைக்குரிய, நேர்மாற்றம் செய்யப்பட்ட/மீளளிக்கப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்பட்ட/செல்லுபடி அற்றதாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் எதுவும் கேஷ் பெக் கடன் அட்டை வழங்கலுக்குத் தகுதி பெறும் கொடுக்கல் வாங்கலாக மாட்டாது.

28.11 கேஷ் பெக் கடன் அட்டை வழங்கலுக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள், இந்த அட்டை வைப்பாளர் ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மேலதிகமானவையேயன்றி, அவற்றைத் தரங்குறைப்பவை அல்ல.

28.12 இக் கேஷ் பெக் கடன் அட்டை வழங்கல், அட்டை வைப்பாளர்களுக்கான ஒரு விசேட வசதியாகும். இதிலுள்ள எதுவும் அட்டை வைப்பாளர் ஒப்பந்தத்தின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குப் பாரபட்சமானதாகவோ அவற்றைப் பாதிப்பதாகவோ அமையாது.

28.13 இக் கேஷ் பெக் கடன் அட்டை வழங்கல் தொடர்பில், ஏதேனும் சர்ச்சைகள் உள்ளிட்ட சகல விடயங்களிலும் வங்கியின் தீர்மானமே இறுதியானதாகவும் கேஷ் பெக் கடன் அட்டை வழங்கல் தொடர்பில் சகல அட்டை வைப்பாளர்களையும் பிணிப்பதாகவும் அமையும்.

28.14 அட்டை வைப்பாளர்களுக்கு முன்னறிவித்தல் கொடுக்காமலே, இக் கேஷ் பெக் கடன் அட்டை வழங்கலுக்குத் தகுதி பெறும் கொடுக்கல் வாங்கல் வகைகளை அல்லது கேஷ் பெக்/தள்ளுபடி பிரிவுகளை மாற்றுவதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது.

28.15 அட்டை வைப்பாளர்களுக்கு முன்னறிவித்தல் கொடுக்காமலே, கேஷ் பெக் கடன் அட்டை வழங்கல் தொடர்பில் இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதையேனும், எந்த நேரத்திலும், மாற்றுவதற்கு வங்கி உரிமை கொண்டுள்ளது. மாற்றங்கள் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து அட்டை வைப்பாளர்கள் அந்த மாற்றங்களினால் முற்றாகப் பிணிக்கப்படுவார்கள். இருந்தபோதிலும், அத்தகைய மாற்றங்கள் பற்றி கடிதம் மற்றும்/அல்லது உள்நாட்டுப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் அறிவித்தல் மற்றும்/அல்லது வங்கியின் அறிவித்தல் பலகைகளில் பார்வைக்கு வைக்கப்படும் விளம்பரம் மற்றும்/அல்லது விபரக்கூற்றுச் செய்தி மூலம் அட்டை வைப்பாளர்களுக்கு அறிவிக்கப்படலாம்.